www.Padasalai.Net

SURYA®
POWER TO SCORE

# DAILY WARM UP

10

# தமிழ்

**10 அரசு வினாத்தாள்கள் - முழு விடைகளுடன்**

- அரசு மாதிரி வினாத்தாள் - முழு விடைகளுடன்
- PTA வினாத்தாள்கள் - முழு விடைகளுடன்
- அரசு பொதுத்தேர்வு வினாத்தாள்கள் - முழு விடைகளுடன்

ஆசிரியர்கள்

**முனைவர் ப.பெ. கலியமூர்த்தி,** M.A., B.Ed., Ph.D.,
(இலக்கியத் தோழன்), தமிழாசிரியர், கும்பகோணம்.

**முனைவர் சிவ. பரந்தாமன்,** M.A., M.Ed., M.Phil, Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், கடலூர்.

**SURYA PUBLICATIONS®**
(A unit of **Shyamala** Group)

No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627 001.**

Phone : 0462 - 2338899, 2338484.
Mobile : 94431-58484, 94425-58484, 89032-58484

**E-mail: suryaguides@yahoo.com**
**website : www.suryapublications.in**

**விலை: ₹ 80/-**

www.Padasalai.Net

தனிப்பிரதி வேண்டுவோர் கீழ்க்காணும் எண்ணில் பணம் செலுத்தியபின்
தொடர்பு கொண்டால் புரொபஷனல் கொரியர் மூலம்
தங்கள் இருப்பிடத்திற்கே அனுப்பி வைக்கப்படும்.

**G.Pay No.: 98942-27449**

## Online Shopping

| | | |
|---|---|---|
| **PhonePe No.** | : | **94431-58484** |
| **G.Pay No.** | : | **94425-58484** |
| **Pay TM No.** | : | **94431-58484** |

## OUR BANK DETAILS

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **446971431** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **510909010051752** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **928507483** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |

Printed at: Sri Shyamala Printers, Tirunelveli.
Marketed by: SURYA Publications & GANGA Publications.

www.Padasalai.Net

# அரசு மாதிரி வினாத்தாள் 2019-20

வினாத்தாள் 1

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி  மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

**1. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**

அ) வானத்தையும் பாட்டையும்  ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும்  ஈ) வானத்தையும் பேரொலியையும்

**2. ''மருந்தே ஆயினும் விருந்தொடு உண்'' என்னும் தொடர் இடம்பெற்ற நூல் ------.**

அ) கொன்றைவேந்தன்  ஆ) குறுந்தொகை
இ) திருக்குறள்  ஈ) நற்றிணை

**3. ''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ------ வினா.**
**''அதோ அங்கே நிற்கும்'' என்று மற்றொருவர் கூறியது ------ விடை.**

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல்  ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை  ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி ------.**

அ) ஜால்ரா  ஆ) பறை  இ) உறுமி  ஈ) நாகசுரம்

**5. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது ------.**

அ) காலம் மாறுவதை  ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை  ஈ) வண்ணம் பூசுவதை

**6. காற்றின் மெல்லிய ------ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ------ பூக்களை மாலையாக்குகிறது.**

**தொழிற்பெயர்களைப் பொருத்தித் தொடர்களை முழுமை செய்க.**

அ) தொடுத்தல், எடுத்தல்  ஆ) தொடுதல், தொடுத்தல்
இ) எடுத்தல், தொடுதல்  ஈ) தொடுத்தல், தொடுதல்

www.Padasalai.Net

7. **வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி**
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம்

8. **''சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன'' - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**
அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை - நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல் - பனை திணை

9. **'கேள்வியினான்' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு**
அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர்
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

10. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்**
அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்

11. **<u>''காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்''</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.**
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் ஓலையும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''*

12. **இப்பாடலின் ஆசிரியர்**
அ) ஔவையார் ஆ) நப்பூதனார்
இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

13. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்**
அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல்
இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

14. **'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள்?**
அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்
இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

15. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**
அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்
இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

www.Padasalai.Net

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4×2=8

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?
18. 'நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
19. "மன்னனும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?
21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5×2=10

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)
23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து |
|---|

அ) வாழ்க்கையில் ------ மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய்த் ------ க் கூத்து சொல்லும்.

ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே ------ அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் ------.

24. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
சிறு – சீறு
25. கலைச்சொற்கள் தருக. அ) Modern Literature ஆ) Epic Literature
26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.
27. **பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவர்கள் கொல்லி வெற்பன் எனவும் பிற

www.Padasalai.Net

மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. 'அறியேன்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

**(அல்லது)**

"வாளால் அறுத்துச் சுடினும்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!"
- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தன்மை அணி குறித்து எழுதுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**


ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

| |
|---|
| பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark, The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3×8=24**

43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்தஇளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரைநகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

–கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். –இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை.

★★★

**விடைகள்** **அரசு மாதிரி வினாத்தாள் - 2019-20** **வினாத்தாள் - 1**

## பகுதி - I

1. ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. அ) கொன்றை வேந்தன்
3. இ) அறியாவினா, சுட்டுவிடை
4. ஆ) பறை
5. இ) இடையறாது அறப்பணிச் செய்தலை
6. ஆ) தொடுதல், தொடுத்தல்
7. இ) உருவகம்
8. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
9. அ) வினையாலணையும் பெயர்
10. ஈ) கலவைத்தொடர்
11. ஈ) சருகும் சண்டும்
12. ஆ) நப்பூதனார்
13. இ) முல்லைப்பாட்டு
14. ஈ) அகன்ற உலகம்
15. அ) பாடுஇமிழ், கோடுகொண்டு

## பகுதி - II

16. அ) நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எதன் அடிப்படையில் அமையும்?
ஆ) கன்னியாகுமரி எந்த ஆண்டு தமிழ்நாட்டுடன் இணைந்தது?
17. நடுநிலையுடன் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகம் உரிமையாகும்.
18. ◆ மரம் வளர்ப்போம்! மாசற்ற காற்றைப் பெறுவோம்!!
◆ மரமின்றி மாசில்லாக் காற்றில்லை!
19. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
20. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை, வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு.
21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.
22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தான். அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பினாள்.
23. அ) தோற்பவை, தோற்பாவை ஆ) விருது, விருந்து
24. சிறு பொந்துக்குள் இருந்து பாம்பு சீறுவதைக் கண்டேன்.
25. நவீன இலக்கியம், காப்பிய இலக்கியம்.
26.

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது. | மூவிடத்திற்கும் உரியது. |
| **எ.கா.** பாடுதல், படித்தல். | **எ.கா.** பாடியவள், படித்தவர். |

www.Padasalai.Net

27. சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்' 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலையை' வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. அறியேன் – அறி + ய் + ஆ + ஏன்

அறி – பகுதி, ய் – உடன்படுமெய் சந்தி, ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## பகுதி - III

29. **செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு:**
- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.
- சமையல் செய்யும் செயற்கை நுண்ணறிவு எந்திரம்.
- விண்மீன்களைக் கணக்கிடும் செயற்கை நுண்ணறிவுக் கருவி.

30. **தர்க்கத்திற்கு அப்பால்:**
- ஜெயகாந்தனின் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதையில் பிச்சை எடுக்கும் கண் தெரியாதவரும், தர்மம் செய்பவராக வரும் ஜெயகாந்தனுமே கதை மாந்தர்கள் ஆவர்:
- காபி அருந்திய ஜெயகாந்தன் இரயில் கட்டணத்திற்கு பன்னிரெண்டனாவை ஒதுக்கிவிட்டு, மீதமிருந்த இரண்டனாவைப் பிச்சைக்காரனுக்குத் தர்மம் செய்கிறார்.
- இரயில் நிலையத்தில் இரயில் கட்டணம் பதின்மூன்றனாவாக விலையேற, பிச்சைக்காரனின் தட்டிலிலிருந்து தர்மம் செய்ததை எடுக்கப்போகிறார் ஜெயகாந்தன்.
- ஜெயகாந்தன் ஓரணாவைப் பிச்சைக்காரனின் தட்டில் போட்டுவிட்டு இரண்டனா எடுக்கும்போது பிச்சைக்காரன் "சாமி இதுதானுங்களா தர்மம்? குருடனை ஏமாத்தாதே" என்றான்.
- மூன்றணாவைத் தர்மம் செய்துவிட்டு அடுத்த இரயில்நிலையம் வரை ஜெயகாந்தன் நடக்க, அவர் ஏற்கனவே செல்லவிருந்த இரயில் விபத்துக்குள்ளானது.
- விபத்திலிருந்து தப்பிக்கக் காரணம், தான் செய்த தர்மம்தானா என்று தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனையை வெளிப்படுத்துகிறார் ஜெயகாந்தன்.

31. அ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

ஆ) 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

இ) விருந்து

32. **இடம் சுட்டிப் பொருள் விளக்கம்:**

**இடம்** : 'கண்ணதாசனின் காலக்கணிதம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் ஒருபோதும் நம் உடலைக் காயப்படுத்துவது கிடையாது.

**விளக்கம்** : 'ஒருவர் தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது' என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

33. **செங்கீரை ஆடிய நயம்:**
- திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

www.Padasalai.Net

- இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடின.
- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.
- நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடியது.
- கம்பிகளால் உண்டான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.
- உச்சிக்கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடியது.
- அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடினார் வைத்தியநாதபுரியில் எழுந்தருளியுள்ள முருகன்.

34. **மனப்பாடம்:**

அ) நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. –வீரமாமுனிவர்

ஆ) வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.
– குலசேகராழ்வார்

35. **தொகாநிலைத் தொடர் வகைகள்:**

| | | |
|---|---|---|
| கண்ணே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| காலையில் நீயெழும்பு | - | ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| மாமழை பெய்கையிலே | - | உரிச்சொற்றொடர் |
| மாம்பூவே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| பாடினேன் தாலாட்டு | - | வினைமுற்றுத் தொடர் |
| ஆடி ஆடி ஓய்ந்துறங்கு | - | அடுக்குத்தொடர் |

36. **அலகிடுதல்.**

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில்/லை | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

37. **தன்மை அணி:**

**அணி இலக்கணம்:**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும்.

www.Padasalai.Net

**எ.கா:**

'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் .........'

**அணிப்பொருத்தம்:**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மையணி ஆகும்.

**பகுதி - IV**

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் முதல் இக்கால வணிக வளாகம் அங்காடிகள் காலச்சூழலுக்கு ஏற்ப வளம் பெற்றுக் காணப்படுவதை ஒப்பிட்டு அறிவோம்.

| சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள், அங்காடிகள் |
|---|---|
| நறுமணப்பொருட்கள், வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி போன்றவற்றை வீதிகளில் வணிகம் செய்தனர். | நறுமணப்பொருட்கள் போன்றவை கடைகளில் மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. |
| பட்டு, பருத்தி நூல், முடி ஆகியவற்றினைக் கொண்டு நூற்கும் கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர்களை நிரம்பக் கொண்ட மருவூர்ப்பாக்க வணிக வீதி. | இன்றைக்கு கைத்தறி ஆடைகளைவிட விசைத்தறி ஆடைகளே அதிகம் விற்கின்றன. வீதிக்கு வீதி பல நவீன ஆடையகங்களைக் காணமுடிகின்றது. |
| முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்கு மருவூர்ப்பாக்க வீதிகளில் குவிந்து கிடக்கின்றன. | குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் காட்சிப்படுத்தப்படுவதில் வெள்ளி, பொன், வைர நகைகள் முன் நிற்கின்றன. |
| எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன. | எல்லாவிதப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கும் பொருட்டு, பல்பொருள் அங்காடிகள் உள்ளன. |
| பிட்டு, அப்பம் போன்றவை மருவூர்ப்பாக்க வணிக வீதிகளில் விற்கப்பட்டன. | சைவம், அசைவம் போன்றவற்றிற்கேற்ப தனியாகவும், சேர்ந்தும் உணவகங்கள் உள்ளன. |
| மீனும், பல வகையான இறைச்சிகளும் விற்கப்பட்டன. | மீன் சந்தை, கோழி மற்றும் இறால் பண்ணைகள், ஆட்டு இறைச்சி கடைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. |
| மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தச்சர், தோல்பொருள் செய்பவர், பொம்மைகள் செய்பவர் எனப் பலரும் இருந்தனர். | இன்றைய வணிக வளாகங்களில் பல வகையான நவீன சாதனங்களை விற்பவர்கள் மற்றும் பழுது நீக்குபவர்கள், முகவர்கள் போன்றோர் உள்ளனர். |

www.Padasalai.Net

| | |
|---|---|
| மருவூர் வணிக வீதிகள் பெரும்பாணர்களின் வாழ்விடமாகவும், சிறுசிறு கைத்தொழில்களுக்கு ஏற்ற இடமாகவும் திகழ்ந்தன. | அனைத்து வகையான பொருட்களும் கிடைப்பதற்கு ஏற்றதாக இன்றைய வணிக வளாகங்களும், அங்காடிகளும் திகழ்கின்றன. |

ஆ) ஆற்றுப்படுத்தல் தமிழ் மக்களின் பண்பாடாக இருந்தது. அது இன்றைய காலத்தில் ஒரு வழிகாட்டுதலாக அமைகிறது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**அரசின் நலத்திட்டங்களை மக்கள் பெற வழிகாட்டுதல்:**

மக்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் வகையில் அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி உரியவர்களுக்குத் தகுந்த நேரத்தில் கிடைக்கும் வகையில் ஊடகங்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் வாயிலாக உரிய வழிகாட்டுதலை தொடர்ந்து வழங்கி வருகிறது.

**பேரிடர் காலத்தில் வழிகாட்டுதல்:**

பெரும் இடர்களிலிருந்து மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், மீண்டு வரவும் வழிகாட்டுதலைப் பேரிடர் மேலாண்மை அமைப்புச் செய்து வருகிறது. நிலநடுக்கம், புயல், வெள்ளம், சுனாமி, கொள்ளை நோய்கள் போன்ற பேரிடர் காலங்களில் அரசுடன் இணைந்து பல்வேறு தன்னார்வ அமைப்புகளும் இணைந்து வழிகாட்டுவதுடன் பற்பல உதவிகளையும் செய்கின்றன.

**கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான அமைப்புகளின் வழிகாட்டுதல்:**

பள்ளி மாணவர்கள் முதல் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் வரை மேற்கொண்டு என்ன படிக்கலாம்? கல்வி உதவித்தொகையினை எவ்வாறு பெறலாம் என்பதை அரசு மற்றும் தனியார் அமைப்புகளின் வழிகாட்டுதல் மூலம் அறியலாம்.

**போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டுதல்:**

பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் முன்வந்து வழிகாட்டுகின்றன

**கல்விசார் திறன் வழிகாட்டுதல்:**

இன்றைய உலகத்தில் கல்வி ஒன்று தான் முக்கியம் என்பதையும் தாண்டி கலை, இலக்கியம், விளையாட்டு உள்ளிட்ட பல்துறை சார்ந்தும் தன்னை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பினை உரிய திறனாளிகளுக்கு வழங்குவதில் ஊடகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வழிகாட்டி முன் நிற்கின்றன.

39. அ) **புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்**

அனுப்புநர்

ம. அகிலன்,
காந்திநகர்,
மதுரை - 2.

பெறுநர்

உயர்திரு பொறியாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
சென்னை - 1.

www.Padasalai.Net

ஐயா,

பொருள்: புதிய மின்விளக்கு பொருத்துதல் வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம்.

எங்கள் தெருவில் கடந்த பத்து நாட்களாக மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. இதனால் சாலையில் செல்வோருக்கு அடிக்கடி விபத்துகள் நேரிடுகின்றன. சில சமூக விரோதிகளும் இச்சூழலைப் பயன்படுத்தி, திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். மேலும் வயதானவர்கள், இரவில் வெளியூர் சென்று வருபவர்களுக்கு மிகவும் துன்பமாக இருக்கிறது. ஆதலால் தயவுசெய்து மின்கம்பங்களைச் சரிசெய்து புதிய மின்விளக்கு பொருத்தித் தருமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ம. அகிலன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
உயர்திரு பொறியாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
மதுரவாயில்,
சென்னை - 1.

ஆ) **''மரம் இயற்கையின் வரம்'' - கட்டுரைப் போட்டி வெற்றி - தோழனுக்குக் கடிதம்.**

தஞ்சாவூர்,
26.08.2022.

அன்புள்ள நண்பனுக்கு கவின் எழுதுவது,

நலம். நலமறிய ஆவல்.

மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றுள்ளாய் என்பதைத் தொலைக்காட்சி செய்திகள் வாயிலாக அறிந்தேன். இன்றைய காலத்திற்கு மிகத் தேவையான ஒரு தலைப்பில் பெருவெற்றியைப் பெற்றுள்ளாய்.

மரங்களின்றி மனிதர்கள் வாழ இயலாது. மழை வளத்திற்கு மரங்களே ஆதாரம். இம்மண்ணின்மீது கொண்டுள்ள பற்றினை உன்னுடைய கட்டுரையில் காட்டியிருப்பதனால்தான் மாநில அளவில் வென்றிருக்கிறாய் என எண்ணுகிறேன்.

உன் நண்பனாக பெருமிதமடையும் நான், நீ மென்மேலும் பற்பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூட வாழ்த்துகிறேன்.

இதய அன்புடன்,
மா. கவின்.

www.Padasalai.Net

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>ப. இளமாறன்,<br>10, காந்தி நகர்,<br>சேலம் - 14. |

40. **படம் உணர்த்தும் கருத்துகள்:**

தேடி வருவோரின் தேவை அறிந்து உதவும் வள்ளல்கள்
நாடி வருவோருக்கு நன்மை பாராட்டும் நன்மன்னர்
பாடி பாராட்டும் பாவலரைப் போற்றும் பாவேந்தர்
இரப்பவருக்கு இல்லை எனக் கூறா நல்லிதயத்தினர்
முகமும் அகமும் மலர்ந்து கொடுத்தே சிறக்கும் கொடையாளர்.

41. **தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியலை நிரப்புதல்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | **க. நகுல்** |
| 2. | பாலினம் | : | **ஆண்** |
| 3. | பிறந்த நாள் மற்றும் வயது | : | **01.04.2000, 22** |
| 4. | தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. | பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **கா. கதிரவன்** |
| 6. | வீட்டு முகவரி | : | **15, இளங்கோ நகர், மதுரை-4** |
| 7. | தொலைபேசி/அலைபேசி எண் | : | **9998887766** |
| 8. | பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | **454** |
| 9. | தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. | பயின்ற மொழிகள் | : | **தமிழ், ஆங்கிலம்** |
| 11. | தட்டச்சு | : | **உயர்நிலை** |
| 12. | கணினி | : | **PGDCA** |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் தட்டச்சர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : மதுரை

நாள் : 26.08.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
*க. நகுல்.*

42. அ) **தமிழக பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்க, வளர்க்கச் செய்ய வேண்டியன:**

1. திருமண விழாக்களில் பொய்க்கால் ஆட்டத்தை நடத்துவேன்.
2. விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
3. கோவில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் முதலிய கலைநிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வேன்.
4. விடுமுறை காலங்களில் தெருக்கூத்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வேன்.
5. விவசாயம், இயற்கை உணவு சார்ந்த விழிப்புணர்வு நிகழ்கலைகள் ஏற்பாடு செய்வேன்.

www.Padasalai.Net

ஆ) **மொழிபெயர்த்தல்: இயற்கை**

பொன்னான சூரியன் தினமும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி இருளை மறையச் செய்யும். பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையைத் தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு ரம்மியமான சூழ்நிலையை உருவாக்கும்.

**பகுதி - V**

43. அ) சங்க இலக்கியப் பாடலடிகள் கீழ்க்காணும் ஐந்தின் அடிப்படையில் அறச்செய்திகளை வலியுறுத்துகிறது.

வறுமை, நிலையான செல்வம், நேரிய ஆட்சி, வாய்மை, ஈகை.

**‘இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.....’** – புறநானூறு

இப்பிறப்பில் அறம் செய்தால், அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை.

**‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**
**அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்’**

மன்னருடைய செங்கோலும் வெண் கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசின் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்.

**‘செல்வத்துப் பயனே ஈதல்’** – புறநானூறு

வீரத்தைப் போலவே ஈகையையும் தமிழ் நூல் போற்றியது. ஈகையும் ஓர் அறச்செயலே. செல்வத்தின் பயன் கொடுத்து மகிழ்வதே என்று வாழ்ந்தனர்.

**‘சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே’** – நற்றிணை

பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி உதவுதலே பண்பு. பிறர் துன்பம் தீர்ப்பதே உண்மையான செல்வம் ஆகும்.

**‘பிழையா நன்மொழி’** – நற்றிணை

மெய் பேசுவது நன்மொழியாகும். வாய்மை எனப்படுவது தவறியும் பொய் பேசாதிருத்தல். நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது.

ஆ) **காற்றைப் போற்றும் கண்ணதாசன்:**

இளந்தென்றலானது நதிகளில் விளையாடி செடிகொடிகளில் தலைசீவி நடந்து வருவதாகக் காற்றின் அழகைக் கண்ணதாசன் எடுத்தியம்புகிறார்.

**கவிதை நயம்:**

பாசமலர் என்னும் திரைப்படத்தில் இடம்பெற்ற இப்பாடல் மிகுந்த இலக்கிய நயங்களுடன் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.Padasalai.Net

**மோனை நயம்:**

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வருவது 'மோனை' ஆகும்.

**சான்று: ம**லர்ந்தும் – **ம**லராத; **வி**டிந்தும் – **வி**ளைந்த; **ந**தியில் – **ந**டந்த

**எதுகை நயம்:**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது 'எதுகை' ஆகும்.

**சான்று:** ம**ல**ர்ந்தும் – ம**ல**ராத; வி**டி**ந்தும் – வி**டி**யாத; ந**தி**யில் – பொ**தி**கை

**முரண் நயம்:**

எதிர்ச்சொற்களால் அமைவது 'முரண்' நயம் ஆகும்.

**சான்று:** மலர்ந்தும் × மலராத; விடிந்தும் × விடியாத

**இயைபு நயம்:**

செய்யுளில் இறுதி எழுத்தோ சீரோ ஒன்றாக வருவது 'இயைபு' ஆகும்,

**சான்று:** வண்ண**மே** – அன்ன**மே** – மன்ற**மே**

**அணி நயம்:**

இப்பாடலில் உவமையணி மற்றும் பிற அணிகளும் பயின்று வந்துள்ளன. 'மலர்ந்தும் மலராத பாதிமலர் போல' என்னும் பாடல் வரிகள் உவமையணிக்குச் சான்றாகிறது.

**பொருள் நயம்:**

நதியில் குளித்து விளையாடும் தென்றல், அடுத்துத் தன்னுடைய தலையைச் சீவிக்கொள்வதாக மிகுந்த பொருள்நயத்துடன் அழகாய்த் தன் கவித்திறனை வெளிப்படுத்தியுள்ளார் கண்ணதாசன்.

44. அ) **மேரியின் வாழ்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையின் கருத்துகள்:**

**முன்னுரை:**

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் மறுக்கப்பட்ட சமூகத்திற்கு குரலாக இருந்தவர் மேரி மெக்லியோட் பெத்யூன். அவரின் வாழ்க்கையை கமலாயன், "உனக்குப் படிக்கத் தெரியாது'' என்ற தலைப்பில் எழுதியுள்ளதைக் காண்போம்.

**உழைக்கும் வர்க்கத்தினர்:**

அதிகாலை 5 மணிக்கு எழுந்து பகல் முழுவதும் பாடுபட்டு ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கிவிடக்கூடாது என்று உழைத்திடும் குடும்பம் மேரியினுடையது. மேரி, தன் தாய் தந்தை சாம், பாட்ஸி, பாட்டி இவர்களோடு வாழும் வறுமை வாய்ந்த உழைக்கும் குடும்பத்தினர்.

**உன்னால் படிக்க முடியாது:**

துவைத்துத் தேய்த்த துணிகள் நிரம்பிய கனத்த கூடையைத் தலையில் தூக்கிய தன் தாயுடன் மேரி வெள்ளைக்கார முதலாளி வீட்டிற்குச் சென்றாள். அங்கு வெள்ளைக்காரச் சிறுமி மேரியை விளையாட அழைக்க அவள் தயங்கி அங்கிருந்த புத்தகத்தை எடுத்தாள். உடனே வெள்ளைக்காரச் சிறுமி புத்தகத்தை பிடுங்கி உன்னால் படிக்க முடியாது என்கிறாள். மனம் துவண்ட மேரி அங்கிருந்து கிளம்பி நடைபிணமானாள்.

www.Padasalai.Net

**மேரியின் கல்வித்தாகம்:**

தன்னிடம் பறிக்கப்பட்ட புத்தகத்தைப் நினைத்து தான் எப்படியாவது படிக்க வேண்டும் என்று மேரி விரும்பினாள். தன் கனவையும் ஆசையையும் பெற்றோரிடம் அவள் பகிர்ந்து கொண்டாள். ஆனால் பதிலேதும் அவளுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

**மிஸ் வில்ஸனின் உதவி:**

மேரியின் ஆர்வத்தைக் கண்ட மிஸ் வில்ஸன் மேரிக்கு உதவிக்கரம் நீட்டினார். “உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். நீ மோயெஸ்வில்லிக்கு வர வேண்டும்'' என்று அழைப்பு விடுத்த மிஸ் வில்ஸனின் வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து நின்றாள்.

**கனவு மெய்ப்பட்டது:**

மனமகிழ்ந்த மேரி தன்னால் இனி பைபிளை வாசித்துவிட முடியும் என்று எண்ணினாள். மேரியின் தந்தை சிலேட்டும், பலப்பமும் வாங்கித் தந்தார். புதிது புதிதாகக் கற்க ஆரம்பித்தாள். அக்கம் பக்கத்தவரின் சம்பள கணக்கைச் சரிபார்க்கும் முக்கிய நபராகவே மாறினாள் மேரி. சில ஆண்டுகள் கல்விக்குப் பிறகு பட்டமளிப்பு விழா நடந்தது. அதில் வெள்ளைத்தாள் சுருள்களில் “இந்தப் பட்டம் பெறும் மாணவர் எழுதவும் படிக்கவும் கூடியவர்'' என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தாள்.

**மேரியின் மேற்படிப்பு:**

மேல்படிப்பினைப் படிக்க விரும்பிய மேரிக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியிடமிருந்து உதவி கிடைத்தது. ஊரே கூடி நின்று நகரத்திற்குப் படிக்கச் செல்லும் மேரியை வாழ்த்தி வழி அனுப்பியது.

**முடிவுரை:**

அவமானங்களை அனுசரித்து, அடக்கத்தாலும், பிறர் உதவியாலும் வென்று தாம் வாழ்ந்த இருட் சமூகத்தில் ஒற்றைச் சுடராய்த் தோன்றி ஓராயிரம் சுடரை ஏற்றினாள் மேரி.

ஆ) **மனித நேயம் கொண்ட கதைமாந்தர் – வீரப்பன்**

**முன்னுரை:**

கு. அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்‘ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் வீரப்பன். அவர் தான் வறுமைப்பட்ட போதும் தன் அன்பையும் அருளையும் கொண்டு நட்பைப் போற்றினார்.

**அன்பாளர்:**

வீரப்பன் காஞ்சிபுரத்தில் விறகுகடையில் வேலை செய்து வந்தார். அவர் ஏழையாக இருந்தாலும் நண்பன் குப்புசாமி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். அனாதையான குப்புசாமிக்கு அவன் உறவினர்களும் உதவ முன்வரவில்லை. ஆனால் தன்னுடைய வறுமையையும் பொருட்படுத்தாமல் வீரப்பன், குப்புசாமியுடன் மனித நேயத்துடன் இருக்கின்றார்.

**கொடையாளர்:**

குப்புசாமி நோய்வாய்ப்பட்டு வேலை இழந்தபோது வீரப்பன் அவரை தன் வீட்டிற்கு அழைத்து வந்து உணவு கொடுப்பார். மேலும், தான் கடன் வாங்கி அதனைக் குப்புசாமிக்குக் கொடுப்பார். சென்னைக்குச் செல்லும் ஆறுமுகத்திடம் கடிதம் ஒன்றையும் மூன்று ரூபாயையும் குப்புசாமியிடம் கொடுத்து அனுப்பினார் வீரப்பன்.

www.Padasalai.Net

**பண்பாளர்:**

வீரப்பன் குப்புசாமி குணமடைய நாள்தோறும் கோயிலுக்குச் சென்று வேண்டுகிறார். அவருக்கு வேலை இல்லாதபோதும் நண்பன் குப்புசாமிக்குக் கொடுக்க ஒருவரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி சென்னைக்குச் செல்லும் ஆறுமுகத்திடம் கொடுத்து அனுப்புகிறார். குப்புசாமியைப் பார்க்கப் போகலாம் என்றால், இந்த மூன்று ரூபாய் பேருந்துக்கு செலவாகிவிடும் என்பதால்தான் கொடுத்தனுப்புகிறேன். இன்னொரு இடத்திலும் பணம் கேட்டிருப்பதாகவும் கிடைத்தவுடன் குப்புசாமியைப் பார்க்க விரைவாக வருவதாகவும் வீரப்பன் தெரிவித்தார்.

**முடிவுரை:**

ஏழ்மையிலும் நட்பைப் பாராட்டி உதவும் வீரப்பன், மனித நேயத்தின் மாமகுடமாகத் திகழ்கின்றார். 'ஒருவன் இருக்கிறான்' என்ற சிறுகதை, மனித நேயத்திற்குச் சான்றாக வீரப்பன் இருக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது.

45. அ) **தலைப்பு: சான்றோர் வளர்த்த தமிழ்**

**முன்னுரை:**

**''சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே –அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா''** *–பாரதியார்*

உலகில் மனித இனம் என்று தோன்றியதோ, அன்றே தமிழ் மொழியும் தோன்றியது. அன்று முதல் இன்று வரை தமிழ்மொழி இளமையாகவே இருந்து வருகின்றது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாழ்ந்த சான்றோர்களால் தமிழ் சிறப்புற்று நிற்கின்றது.

**சங்கத்தமிழ்:**

'தமிழ்' என்ற சொல் தொல்காப்பியப் பாயிரத்தில் இடம்பெறுகின்றது. கிபி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவையே சங்கத்தமிழ் தரும் களஞ்சியம் ஆகும். கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர், நல்லந்துவனார் முதலிய எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்களால் பாட்டும் தொகையும் உருவாக்கப்பட்டு, சங்கத்தமிழ் வளர்க்கப்பட்டது.

**அறத்தமிழ்:**

சங்ககாலத்திற்குப் பின் தோன்றிய காலத்தில் பொய்யும் குற்றமும் தோன்ற ஆரம்பித்தது. அதனைப் போக்க திருவள்ளுவர், சமண முனிவர்கள், விளம்பிநாகனார், கபிலர், கணிமேதாவியார் ஆகிய பல சான்றோர் பெருமக்கள் அறநூல்களைப் படைத்து, அறத்தமிழை வளர்த்தனர்.

**காப்பியத்தமிழ்:**

ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களும் காப்பியத் தமிழை வளர்த்தன. இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், திருத்தக்கத்தேவர் ஆகிய சான்றோர்கள் காப்பியத் தமிழைத் தழைக்கச் செய்தனர்.

**சிற்றிலக்கியம்:**

(பரணி, சதகம், பிள்ளைத்தமிழ்)

சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். ஒருவரைக் குழந்தையாகப் பாவித்து, 10 பருவங்களில் வளர்ச்சி நிலையைப் பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். ஒட்டக்கூத்தர்,

www.Padasalai.Net

குமரகுருபரர் ஆகியோர் பிள்ளைத்தமிழ் பாடி வளர்த்தனர். சதகம் (100) பாடல்களைக் கொண்டது சதகம். ஆத்மநாத தேசிகர், கார்மேகக் கவிஞர் ஆகியோர் சதகம் பாடினர். ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் பரணி இலக்கியத்தை வளர்த்தனர்.

**சமயத்தமிழ்:**

சைவம், வைணவம், கிறித்துவம், இஸ்லாம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு சமயத்தமிழை வளர்த்தனர். திருநாவுக்கரசர், வீரமாமுனிவர், உமறுப்புலவர் ஆகியோர் சமயத்தமிழை வளர்த்தனர். இதற்குப் பன்னிரு திருமுறைகள், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், சீறாப்புராணம், தேம்பாவணி போன்றவை சான்றாக விளங்குகின்றன.

**முடிவுரை:**

காலந்தோறும் தமிழ், தன்னை வளர்ப்பவர்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்தும் சிறந்தும் வருகின்றது என்பதை இலக்கிய வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன.

**"தமிழுயரத் தமிழன் உயர்வான்**
**தமிழயரத் தமிழன் அயர்வான்"** *-பாவாணர்*

ஆ) **தலைப்பு: விண்வெளி ஆய்வும் இந்தியாவும்**

**முன்னுரை:**

**"நிலவைப் பார்த்துச் சோறுண்ட காலத்திலேயே**
**நிலாவில் சோறுண்ண கனா காண்கிறோம்"** என்னும் கவிதையடிகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் விண்வெளி பற்றிய விருப்பத்தினை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**விண்வெளியில் தமிழரின் அறிவு:**

சங்க காலத் தமிழர் விண்ணின் கோள்களையும் காற்று மண்டலத்தையும் அவற்றின் இயக்கங்களையும், கால அளவுகளையும் அளவிட்டறியும் வானியல் அறிவியலை அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு நம் தமிழ் இலக்கியங்களே சான்றாகும். விண்ணைக் கடந்து, அண்டங்கள் நுழைந்து, அறிவாராய்ச்சி வரலாற்றை ஆவணப்படுத்தி வைத்தனர்.

உலகம் உருண்டை என்பதை மேற்குலகம் கண்டறிந்து கூறியதே 16 ஆம் நூற்றாண்டில்தான். ஆனால், இதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர், தங்கள் முன்னோர் வழியாக 'உலகம் உருண்டை' என்னும் உண்மையைப் பரவலாகத் தெரிந்து வைத்திருந்தனர் என்பதற்குத் திருவாசகமே (திருவண்டப் பகுதி) சான்றாகத் திகழ்கிறது.

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்......"** என்னும் பாடல் வானியல் என்னும் அடிப்படை அறிவியல் குறித்த செய்திகளைக் கூறுகிறது.

விமானியால் செலுத்தப்படாத வானூர்தியைப் பழந்தமிழர் விண்ணில் செலுத்தி இருக்கலாம் என்பதை, **'வலவன் ஏவா வானூர்தி'** என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

www.Padasalai.Net

**கல்பனா சாவ்லா:**

கல்பனா சாவ்லா அரியானா மாநிலம் கர்னலில் 1916 இல் பிறந்தார். பஞ்சாபிக் குடும்பத்தைச் சார்ந்தவர். கல்பனா என்றால் கற்பனை என்ற பொருள். தாகூர் அரசுப் பள்ளியில் கல்பனா சாவ்லா ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் பட்டம் பெற்றார். விண்வெளிப் படிப்பை அமெரிக்காவில் முடித்தார். கல்பனா சாவ்லா 1995 இல் நாசாவில் இணைந்தார். 1997 இல் விண்வெளிப்பயணம் செய்தார். 372 மணிநேரம் வானத்திலேயே இருந்து சாதனை புரிந்தார். 2003 சனவரியில் கொலம்பியா விண்கலத்தில் விண்வெளி சென்றார் கல்பனா சாவ்லா. விண்வெளி ஆய்வை முடித்துத் திரும்பும்போது விண்வெளி ஓடம் வெடித்து கல்பனா சாவ்லா விண்ணில் கலந்தார்.

**விண்ணியல் அறிவியல் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை:**

இன்றைய அறிவியலின் துரித வளர்ச்சி, நாளை எவ்வாறெல்லாம் அமைய முடியும் என்பதைக் கவிப்பேரரசு வைரமுத்து,

**''வியாழனை முட்டித் துளைத்த**
**வால்நட்சத்திரத்தால் அங்கே தண்ணீரும்**
**உயிர்களும் உற்பத்தியாகலாம்.....**
**என்றேனும் ஒருநாள் - இந்தப்பூமி**
**என்னும் கிரகம் இடிகொண்ட முட்டையாய்ச்**
**சிதறுண்டு போக, இங்கிருந்து தப்பிக்க**
**வசதிகொண்ட மனிதர்கள் வியாழன் கிரகத்தில்**
**வீடு வாங்கலாம்.....**
**இதுவரைக்கும் பூமிக்கு வெயில்தந்த**
**பழைய சூரியனைப் புறந்தள்ளிவிட்டு,**
**இன்னொரு சூரியக் குடும்பத்துக்கு**
**ஜீவராசிகள் இடம் பெயரலாம்.....''** என்பதிலிருந்து விண்ணில் ஆய்வில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அறியமுடிகிறது. வானத்திலிருந்து விழுகின்ற விண்கற்களால் பூமிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமலிருக்க ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

**முடிவுரை:**

**'தமிழன் என்று சொல்லடா**
**தலை நிமிர்ந்து நில்லடா'**

நம்நாட்டிற்குத் தேவையான செயற்கைக்கோளை விண்ணில் அனுப்பி நம் தேவைகளை நிறைவு செய்வதே நம் முதற்பணியாகக் கொள்ளவேண்டும். அறிவியல் தந்த தமிழர் மரபில் பிறந்த நாம் அறிவியல் தமிழை வளர்ப்போம். விண்வெளித்துறையில் புதிய சாதனைகள் புரிவோம்.

★★★

www.Padasalai.Net

# PTA மாதிரி வினாத்தாள் - 1

வினாத்தாள் 2

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

**1. ''மருந்தே ஆயினும் விருந்தொடு உண்'' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் .............**

அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன்

இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**2. 'மலர்கள் தரையில் நழுவும்' எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**3. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது .............**

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**4. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல் .............**

அ) எள் கசடு ஆ) பிண்ணாக்கு இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி

**5. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**6. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -**

அ) திருத்தணியும் திருப்பதியும் ஆ) திருப்பரங்குன்றமும் பழனியும்

இ) திருப்பதியும் திருத்தணியும் ஈ) திருப்பதியும் திருச்செந்தூரும்

**7. கொடுக்கப்பட்டுள்ள அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)**

அ) மலை மீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.

ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

**8. கருணையன் என்பவர் .............**

அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு

இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப்

www.Padasalai.Net

9. **'எய்துவர் எய்தாப் பழி' - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

10. **ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**
அ) குலா ஆ) இலா இ) சீலா ஈ) துலா

11. **சோலையில் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.**
அ) பூஞ்சோலை-அரும்புகள் ஆ) மலை-எறும்புகள்-தேன்
இ) பூஞ்சோலையில்-வண்டுகள்-தேன் ஈ) கானகம்-வண்டுகள்-நீர்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"*

12. **இப்பாடல் இடம் பெற்ற நூல் .............**
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13. **நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்**
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்**
அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15. **பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை-**
அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.
ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?

www.Padasalai.Net

18. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.
19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
20. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்ற 'உலகக் காற்று நாள்' விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
21. 'செயற்கை' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.
23. **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
அ) தொடு-தோடு ஆ) மலை-மாலை
24. 'தணிந்தது' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
26. **குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**
குறிப்பு: எதிர்மறையான சொற்கள் அ) அருகில் அமர்க ஆ) மீளாத் துயர்
27. **கலைச்சொல் தருக.**
அ) Homograph ஆ) Vowel
28. **நாள்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனைத் தமிழெண்களில் எழுதுக.**
ஞாயிற்றுக்கிழமை - 20
புதன்கிழமை - ............. சனிக்கிழமை - .............

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18)**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?
ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?
இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

www.Padasalai.Net

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6

**34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"தென்னன் மகளே!" எனத் தொடங்கும் 'அன்னை மொழியே' பாடல். **(அல்லது)**

"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்து பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் - அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்டதென்றன் - கம்பன்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு - யாரம்மா! - கண்ணதாசன்

www.Padasalai.Net


கவிச்சக்கரவர்த்தியின் கவிதையையும் கவியரசின் கவிதையையும் ஒப்பிட்டுக் கருத்துகளை எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கு அழைத்துக் கடிதம் எழுதுக.

40. **காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.**



41. **கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் :
4. தேசிய இனம் :
5. இரத்த வகை :
6. உயரம் மற்றும் எடை :
7. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேரவிரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் :

மாணவரின் கையெழுத்து

இடம் :

நாள் :

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

42. அ) நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.

www.Padasalai.Net

வினாத்தாள் 3

# PTA மாதிரி வினாத்தாள் - 2

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1. **“இவள் தலையில் எழுதியதோ**
**கற்காலம் எப்போதும்......” இவ்வடிகளில் கற்காலம் என்பது**
அ) தலைவிதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

2. **எழுகதிர், முத்துப்பல் – இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே –**
அ) வினைத்தொகை, பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை, வினைத்தொகை
இ) உவமைத்தொகை, வினைத்தொகை ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை

3. **‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி–**
அ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) சங்கம் மருவி காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

4. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் –**
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5. **இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர்**
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்

6. **கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர், இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர் –**
அ) கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயிரார்.
ஆ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
இ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
ஈ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்தி வைத்தார்.

7. **பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

www.Padasalai.Net

**8. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் -**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**9. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது -**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

**10. <u>'சிவப்புச் சட்டை'</u> பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**11. ஆலும் வேலும் பல்லுக்குறுதி,
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.**

அ) ஆலமரம்,வேப்பமரம் - **ரு, க** ஆ) ஆலமரம், வேலமரம் - **ச, உ**

இ) அரசமரம், வேங்கைமரம் - **க, உ** ஈ) வேப்பமரம், ஆலமரம் - **ச, கூ**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

*"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்*
*பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்*
*பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்*
*கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"*

**12. இப்பாடலின் ஆசிரியர்**

அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர்

இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்

**13. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ் பருவம் -**

அ) அம்மானை ஆ) சப்பாணி

இ) சிறுதேர் ஈ) செங்கீரை

**14. 'குண்டலமும் குழைகாதும்' - இலக்கணக்குறிப்பு தருக.**

அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்

**15. கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே -**

அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது

ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது

இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

www.Padasalai.Net

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4×2=8
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக்கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"
-இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?
17. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?
18. **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.
ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.
19. மெய்கீர்த்திக் குறித்துத் தாங்கள் அறிந்த இரண்டு கருத்துகளை எழுதுக.
20. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
21. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5×2=10

22. அ) **தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்தி எழுதுக.**
இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.
ஆ) மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரே தொடராக்குக.
23. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
24. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதல்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
25. **கலைச்சொல் தருக.**
அ) Ultraviolet Rays ஆ) Space Technology
26. **பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
27. 'வருக' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. **தொழிற்பெயர்களின் பொருளிற்கேற்பத் தொடர்களை முழுமை செய்க.**
அ) பசுமையான ............. ஐக் ............. கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) காட்டு விலங்குகளைச் ............. தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ............. திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

www.Padasalai.Net

## பகுதி - II

16. ◆ கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர்) - குலேசபாண்டியன்
 ◆ காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர்) - இடைக்காடனார்

17. ◆ காற்றின் ஆற்றலை 'வளி மிகின் வலி இல்லை' (புறம் - 51) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.
 ◆ மதுரை இளநாகனார் (புறம் - 55) கடுங்காற்று, மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

18. அ) யார் யாருடைய ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன?
 ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் எவ்விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது?

19. ◆ அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பி, அதனை அழியாத வகையில் கல்லில் செதுக்கினார்கள்.
 ◆ பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம், சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப்பெயர் பெற்றது.

20. "உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்" என்னும் ஔவையாரின் கூற்று கொடை என்பதும் ஓர் அறம் என்பதைக் காட்டுகிறது.

21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
 கண்ணோட்டம் இல்லாத கண்.

22. அ) ம**ற**த்தின் - ம**ர**த்தின், ப**ரி**த்து - ப**றி**த்து, **தண்** - **தன்**
 ஆ) மலருக்குப் பெயர் உண்டு.

23. ◆ வேங்கை - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும். (தனிமொழி)
 ◆ வேம் + கை - வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது. (தொடர் மொழி)

24. ◆ நிலம் - முல்லை ⟶ காடு
 ◆ பொழுது - பெரும்பொழுது ⟶ கார்காலம் (மழைக்காலம்)
 ◆ கருப்பொருள் - உணவு ⟶ வரகு

25. அ) Ultraviolet Rays - புற ஊதாக்கதிர்கள்
 ஆ) Space Technology - விண்வெளித் தொழில்நுட்பம்

26. சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலை'யை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

27. வருக = வா (வரு) + க
 வா - பகுதி; 'வரு' எனத் திரிந்து விகாரம்; க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

28. அ) பசுமையான **காட்சி**யைக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது.
 ஆ) காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது.

www.Padasalai.Net

## பகுதி - III

29. **நிகழ்த்துக்கலையின் மூன்று குறிப்புகள்:**

- காலில் சலங்கை அணிந்து ஆடும் நிகழ்கலை கரகாட்டம்.
- கரகம் என்பது, பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல் ஆகும்.
- கரகாட்டத்தை 'கும்பாட்டம்' என்றும் அழைப்பர்.

30. **சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல்:**

| | | |
|---|---|---|
| மின் விசிறிக் காற்று | : | நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா. |
| சோலைக் காற்று | : | நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். |
| மின் விசிறிக் காற்று | : | மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா? |
| சோலைக் காற்று | : | ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. |
| மின் விசிறிக் காற்று | : | இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன். |
| சோலைக் காற்று | : | அப்படியா! அப்புதுமொழி யாது? |
| மின் விசிறிக் காற்று | : | "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்". |

31. அ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்.

ஆ) அம்மானை பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக ம.பொ.சி இலக்கிய அறிவினைப் பெற்றார்.

இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி அதனை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.


32. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன:**

- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

www.Padasalai.Net

## பகுதி - IV

43. அ) **ஜெயகாந்தனின் நினைவுச் சிறப்பிதழ் – சுவரொட்டி:**



**கங்கா வார இதழ்** வெளியிடும்

**ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ் – 2022**

வெளியீட்டு நாள்
26.08.2022

உள்ளே.....
- ★ வாழ்க்கை வரலாறு
- ★ படைப்பின் அனுபவம்
- ★ காந்தம் ஜெயகாந்தன்: கட்டுரை
- ★ புகழ் கவிதைகள்
- ★ திரைபேசும் காந்தம் - துணுக்குகள்
- ★ சாகித்திய அகாதெமி விருது அனுபவம்

100 பக்கங்கள்

"முதலில் எழுதுகிறவன் என்ற முறையில், எதை எழுதுவது என்று தீர்மானிப்பவன் நானே"
- ஜெயகாந்தன்

விலை ₹ 30

முன்பதிவுக்கு:
ஸ்ரீ கங்கா பதிப்பகம், திருநெல்வேலி-1. தொலைபேசி: 0462-2338899

ஆ) **செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்:**

**முன்னுரை:**

ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளும். வெறும் வணிகத்துடன் அது நின்றுவிடாது. செயற்கை நுண்ணறிவின் வெளிப்பாடுகள் இனி மிகுதியாக இருக்கும்.

**ஊர்திகளை இயக்குதல்:**

எதிர்காலத்தில் நாம் இயக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்கப்படும். இதனால் விபத்து குறையும். போக்குவரத்து நெரிசல் இருக்காது. பயண நேரம் குறையும். எரிபொருள் மிச்சப்படும்.

**கல்வித்துறை:**

கல்வித்துறையில் இத்தொழில்நுட்பத்தைப் பல விதங்களில் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

**பிற செயல்பாடுகள்:**

விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதன் அளிக்கும் சேவையை இயந்திர மனிதன் செய்யும். நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது போன்றவை.

**வேலை வாய்ப்புகளில் மாற்றம்:**

வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றத்தை எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்டு வரும்.

**இயந்திர மனிதனிடம் குழந்தை:**

எதிர்காலத்தில் இயந்திர மனிதனிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு அலுவலகம் செல்லும் பெற்றோரைப் பார்க்க முடியும்.

**தோழனாய் இயந்திர மனிதன்:**

வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும், அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்தும் பேணும் இயந்திர மனிதர்களை நாம் பார்க்க முடியும்.

www.Padasalai.Net

**உயிராபத்தை விளைவித்தல்:**

செயற்கை நுண்ணறிவுள்ள இயந்திர மனிதர்களால், மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களையும் செய்ய முடியும். மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்கக்கூடிய செயல்களையும் செய்ய முடியும்.

**வணிக வாய்ப்புகள்:**

பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும், புதிய வணிக வாய்ப்புகளைச் ஏற்படுத்திக் கொள்ளவும் செயற்கை நுண்ணறிவு பயன்படும்.

**முடிவுரை:**

செயற்கை நுண்ணறிவு சாதனங்களால் மனிதனின் வேலைப்பளு குறைந்துள்ளது. கால விரயம் தடுக்கப்பட்டுள்ளது.

44. **அ) தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றிய உரையாடல்:**

பங்குபெறுவோர் – தமிழன், உறவினர் மகள்

**உறவினர் மகள்** : வணக்கம் ஐயா.

**தமிழன்** : வணக்கம்.

**உறவினர் மகள்** : உரையாடல், உரைநடை என்றால் என்ன?

**தமிழன்** : நீயும் நானும் பேசினால் உரையாடல். அதையே எழுதினால் உரைநடை.

**உறவினர் மகள்** : உரைநடை வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து யாது?

**தமிழன்** : உரைநடையில் எதுகை மோனை இல்லை. ஆனால் அடுக்கு மொழிகள் உண்டு. இயல்பான ஒழுங்கில் அமையும்.

**உறவினர் மகள்** : தமிழ் உரைநடையின் வேறு வகைகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. பொதுவாக உரைநடையினை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். விளக்க உரைநடை, அளவை உரைநடை, எடுத்துரை உரைநடை, வருணனை உரைநடை, நாடக உரைநடை, சிந்தனை உரைநடை.

**உறவினர் மகள்** : எனக்கு வருணனை உரைநடையைப் பற்றி கூற முடியுமா?

**தமிழன்** : கூறுகிறேன். வருணனை உரைநடை என்பது புலனுணர்வு அனுபவங்களை வருணனையாக விவரிப்பது.

**உறவினர் மகள்** : உரைநடையில் ஓசை இன்பம் ஏற்படுமா?

**தமிழன்** : ஏற்படும். உதாரணமாக, இரா. பி. சேதுபிள்ளையின் தமிழின்பம் என்னும் நூலைக் கூறலாம்.

**உறவினர் மகள்** : உரைநடையில் இலக்கிய உத்திகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. மு.வ. உரைநடையில் உவமை, எதுகை, மோனை சொல்லாட்சி போன்ற நான்கு உலக உத்திகளைக் கையாண்டுள்ளார்.

**உறவினர் மகள்** : மோனையும், இயைபும் வருவதுபோல் உரைநடை சொல்லுங்கள் ஐயா!

www.Padasalai.Net

**தமிழன்** : சொல்கிறேன். இரா.பி.சேதுபிள்ளையின் 'உமறுப்புலவர்' எனும் கட்டுரையில், பாண்டிய நாட்டில் பருவமழை பெய்யாது ஒழிந்தது, பஞ்சம் வந்தது, பசி நோயும் மிகுந்தது.

**உறவினர் மகள்** : ஐயா! கடைசியாக, முரண் நயம் பற்றி மட்டும் கூறுங்கள் ஐயா!

**தமிழன்** : சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவர். "குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒரு பக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்...." என்று தோழர் ப. ஜீவானந்தம் எழுதியிருப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

**உறவினர் மகள்** : மிக்க நன்றி ஐயா. தங்களிடமிருந்து உரைநடையின் சிறப்பினை நன்கு அறிந்து கொண்டேன்.

**தமிழன்** : வணக்கம்!

ஆ) **மேரியின் வாழ்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையின் கருத்துகள்:**

**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 - வினாத்தாள் 1 - வி.எண்: 44 (அ).**

45. அ) **அறத்தான் வருவதே இன்பம்**

**முன்னுரை:**

உலகமே வியக்கும் அளவிற்கு அறப் பண்புகளை உருவாக்கியவர்கள் தமிழர்கள். மக்கள் இன்பம் அடைவதற்குப் பல வழிகள் உள்ளன. பொன்னையும் பொருளையும் சேர்த்து வாழ்வதில் இன்பம் இல்லை. அதை நன்முறையில் இல்லாதவருக்குக் கொடுப்பதால் வருவதே இன்பம்.தீமை இல்லாமல் வரும் அனைத்தும் அறம் ஆகும்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது:**

கொடை, இரக்கம், அன்பு, மனிதநேயம், தன்னலமின்மை, இன்னாசெய்யாமை, பொதுநலம் ஆகிய அனைத்தையும் மனித வாழ்வில் பார்க்க முடிகிறது. வறுமையில் வாடுபவர்களுக்குப் பொருள் கொடுப்பதும் உணவில்லாத அவர்களுக்கு உணவு கொடுப்பதுவும் அறம். அதை மனிதர் வாழ்வில் காண முடிகிறது.

**இலக்கியம் காட்டும் அறம்:**

சங்க இலக்கியங்களில் அறம் வழி வாழ்ந்த தமிழர்களை காணமுடிகிறது. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்கிறது புறநானூறு. 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' என்கிறது குறுந்தொகை. திருக்குறள் அறன்வலியுறுத்தல் என்ற ஓர் அதிகாரத்தையே வைத்துள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவையே அறம் என்கிறது மணிமேகலை. அவ்வையாரும் அறம் செய்ய விரும்பு என்கிறார்.

**அறத்தான் வருவதே இன்பம்:**

அறத்தால் வருவதே இன்பம் என்று சங்ககால மக்கள் வாழ்ந்து வந்தனர். கொடைச் சிறப்பால் வள்ளல்கள் போற்றப்படுவதற்குக் காரணம் அவர்களின் அறமேயாகும். வறுமையில் வாடும் ஏழைகளுக்குத் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து, அவர்களை வாழ வைத்து அதில் இன்பம் கண்டவர்கள் தமிழர்கள். ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள் வரை அனைத்தையும் ஒன்றெனக் கருதி அறம் செய்தனர்.

**முடிவுரை**

அன்பாலும் அருளாலும் பண்பாலும் அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்வதே அறமாகும். அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் என்பது உறுதி.

www.Padasalai.Net

ஆ) **தலைப்பு: அரசுப் பொருட்காட்சி**

**முன்னுரை:**

எங்கள் ஊரில், அரசுப் பொருட்காட்சி, திலகர் திடலில் நடைபெற்றது. அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்தேன். அங்கே நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகளைக் குறித்து இக்கட்டுரை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**நுழைவுச்சீட்டு:**

பொருட்காட்சி உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் பத்து வயதிற்குட்பட்டவர்களுக்கு ரூ.30ம் பத்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூ.50ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

**பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள்:**

வனத்துறை அரங்கத்தின் உள்ளே சென்று பார்த்தபோது வனத்தையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பது எப்படி என்பதை அறிந்து கொண்டேன். கல்வித்துறை அரங்கத்தின் உள்ளே கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கல்வியின் சிறப்பு குறித்து பல்வேறு செய்திகள் அச்சிடப்பட்டு ஒட்டி வைக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துத் துறையினரின் சாலை விதிகளைக் கடைபிடிப்பதால் சாலை விபத்துக்களைத் தவிர்க்கலாம் என்ற விளம்பரப் பதாகைகளையும் காண முடிந்தன. காவல்துறை, பொதுப்பணித் துறை, மீன் வளத்துறை, வேளாண்துறை போன்று பல்வேறு துறை சார்ந்த அரங்கங்களின் உள்ளே சென்று அரிய பல தகவல்களை அறிந்து கொண்டேன்.

**அங்காடிகள்:**

வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் எனப் பல்வேறு பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிக் கொள்ளும் அளவுக்குப் பல்வேறு அங்காடிகள் இருந்தன. உணவு அங்காடிக்குச் சென்று டெல்லி அப்பளம், மிளகாய் பஜ்ஜி, பனிக்கூழ் முதலியவற்றை வாங்கி உண்டேன்.

**இராட்டினம்:**

மயக்கம் தந்தாலும் மனதை மயக்கும் இராட்டினங்கள் சுழலும் முறையை வியப்புடன் கண்டு மகிழ்ந்தேன்.

**பிற பொழுதுபோக்கு அம்சங்கள்:**

பேய்வீடு, பாதாளக் கிணறு, முப்பரிமாண திரையரங்கம், மீன்காட்சி சாலை, பனிவீடு எனப் பல்வேறு அரங்கங்கள் இருந்தன. இப்பொழுதுபோக்கு அரங்கங்களுக்குத் தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்பட்டது.

**முடிவுரை:**

பல மணி நேரமாக சுற்றிப்பார்த்த களைப்பு ஒருபுறம் இருந்தாலும் அங்கே சுற்றிப் பார்த்த மகிழ்ச்சி மிகுதியுடன் வீடு திரும்பினேன்.

★★★

www.Padasalai.Net

வினாத்தாள் 4

# PTA மாதிரி வினாத்தாள் - 3

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

**1. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்? இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்.

ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஈ) 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

**2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| | | |
|---|---|---|
| **அ) கொண்டல்** | - | **1. மேற்கு** |
| **ஆ) கோடை** | - | **2. தெற்கு** |
| **இ) வாடை** | - | **3. கிழக்கு** |
| **ஈ) தென்றல்** | - | **4. வடக்கு** |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

**3. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.**

தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்
திரண்டோடும்போது ஒரு பெயர் - அவை என்ன?

அ) நீர், மழை, ஆறு, ஓடை ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்

இ) மாரி, கார், நீர், புனல் ஈ) மழை, புனல், மேகம், நீர்

**4. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**5. பூக்கையைக் குறித்துப் பூவே புரிவொடு காக்க என்று ............., ............. வேண்டினார்.**

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

www.Padasalai.Net

விடைகள்

# PTA மாதிரி வினாத்தாள் - 3

வினாத்தாள் - 4

## பகுதி - I

1. ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
2. ஆ) 3, 1, 4, 2
3. ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்
4. இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
5. அ) கருணையன், எலிசபெத்துக்காக
6. ஈ) சிலப்பதிகாரம்
7. ஈ) மரக்கன்றுகளை
8. இ) கல்வி
9. ஆ) கால் உடை – காலால் உடைத்தல்
10. ஈ) பாடல்; கேட்டவர்
11. ஆ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
12. இ) சொல்லிசை அளபெடை
13. அ) சிற்றூர்
14. ஆ) மலைபடுகடாம்
15. அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு

## பகுதி - II

16. 'நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்' என்று ஜெயகாந்தன் குறிப்பிடுகிறார்.

17. அ) நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் எவ்வாறு அமையும்?
ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

18. அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பி, அதனைக் கல்லில் செதுக்கியமையே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கமாக அமைந்தது.

19. **புதிய கண்டுபிடிப்பு:**
இன்றைய கண்டுபிடிப்புகள் அறிமுகமாகும்போது பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.
**மின்னணுக் கல்வியறிவு:**
கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும், மின்னணுச் சந்தைப்படுத்தலையும் அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கி வணிகத்தில் வெற்றியடைய உதவுகிறது.

20. **உணவுப் பொருள்கள்:**

| **முல்லை நிலம்** | **மருத நிலம்** |
|---|---|
| வரகு | செந்நெல் |
| சாமை | வெண்ணெல் |

21. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

22. பொறித்த = பொறி + த் + த் + அ
பொறி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

www.Padasalai.Net

23. அ) வானம் **கருக்கத்** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

ஆ) கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சை** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.

இ) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.**

24. அறியா வினா மற்றும் ஐய வினா.

25. 
- நொறுங்கத் தின்றால் நூறு வயது.
- வாழ்வதற்காக உண், உண்பதற்காக வாழாதே.

26. 
- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி "நிரல்நிறை அணி" ஆகும்.
- செய்யுளில் சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

27. அ) பாதைத் தெரியாத **இயற்கைக்** காடுகளில் பயணிக்கச் **செயற்கைக்** கருவிகள் பயன்படுகின்றன.

ஆ) முகிலன், '**நான்தான்** குற்றவாளி' என்று **தாமே** ஒப்புக்கொண்டான்.

28. அ) Belief – நம்பிக்கை ஆ) Renaissance – மறுமலர்ச்சி

## பகுதி - III

29. **இளம் பயிர் வகைகளின் தொடர்கள்:**

பிள்ளை - தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன்.
வடலி - காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.
நாற்று - நெல் நாற்று நட்டேன்.
கன்று - வாழைக்கன்று நட்டேன்.
பைங்கூழ் - சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

30. அ) போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

ஆ) தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

இ) பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

31. **காலமாற்றம், விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள்:**
- இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை.
- இல்ல விழாக்கள் தற்போது திருமண மண்டபத்திலேயே நடைபெறுகின்றன.
- தற்காலத்தில் அறிமும் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதும் இல்லை.

32. **கூரான ஆயுதம்:**

கூரான ஆயுதம்: உழைத்ததால் கிடைத்த ஊதியம்.

காரணம்: இதுவே அவனுடைய பகைவனை வெல்லும் கூரான ஆயுதம்.

www.Padasalai.Net

வினாத்தாள் 5

# PTA மாதிரி வினாத்தாள் - 4

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.**
**பச்சரிசியைக் கொண்டு ............. செய்து பாசிப்பருப்பினை வறுத்து ............. பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு ............. செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி ............. செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.**
அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா
ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்
ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

2. **சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) ஏர், உழவு, மாடு, மண் ஈ) உழவு, ஏர், மண், மாடு

3. **பாரதியார் காற்றை 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் -**
அ) மணம் வீசும் காற்றாய் நீ வா
ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா
ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

4. **மேன்மை தரும் அறம் என்பது .............**
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5. **இலையுதிர் காலம் ............. சருகாயின!**
**மழைக்காலம் ............. தழைத்தன!**
**சருகுகளோ செழுமையான உரங்களாயின!**
**-புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.**
அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின
ஆ) காடெல்லாம், வளர்ந்தன
இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்
ஈ) மலையெல்லாம், முளைத்தன

www.Padasalai.Net

**6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**7. பின்வருவனவற்றுள் முறையான தொடர்**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

**8. எர்லி மார்னிங் எழுந்து வாக்கிங் சென்று வந்து டீ குடித்த அம்மா, நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். - இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொல் வரிசையைத் தேர்க.**

அ) வைகறை, நடைப்பயிற்சி, பத்திரிகை, தேநீர்
ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிகை
இ) காலை, நடை, தேநீர், செய்தி
ஈ) வைகறை, நடைப்பயிற்சி, தேநீர், செய்தித்தாள்

**9. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.**
**பூனையார் பால்சோற்றைக் கண்டதும் விரைந்து வருகிறார்.**
**- ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதிகள் முறையே -**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
ஈ) காலவழுவமைதி, இட வழுவமைதி

**10. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை -**

அ) குலை வகை
ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை
ஈ) இலை வகை

**11. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி.**

அ) உவமை
ஆ) தற்குறிப்பேற்றம்
இ) தீவகம்
ஈ) உருவகம்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

*"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*
*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*
*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*
*பொருத்துவதும் கல்வியென்றே போற்று."*

**12. பாடல் இடம்பெற்ற நூல் -**

அ) நீதிவெண்பா
ஆ) புறநானூறு
இ) வெற்றி வேற்கை
ஈ) கொன்றை வேந்தன்

www.Padasalai.Net

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக.

குறிப்புகள்: முன்னுரை - தமிழன் அறிவியலின் முன்னோடி - விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் - விண்ணியல் அறிவியல் நமது கடமை - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் - சுழன்றும் ஏர்ப்பினது உலகம் - இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி பொருத்தமான தலைப்பிடுக.

★★★

**விடைகள்** **வினாத்தாள் - 5**

# PTA மாதிரி வினாத்தாள் - 4

## பகுதி - I

1. இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்
2. ஈ) உழவு, ஏர், மண், மாடு
3. ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
4. அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
5. இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்
6. ஈ) அங்கு வறுமை இல்லாததால்
7. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
8. ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிகை
9. இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
10. ஆ) மணி வகை
11. ஈ) உருவகம்
12. அ) நீதிவெண்பா
13. ஆ) அருளை, அறிவை
14. இ) அருமை + துணையாய்
15. ஆ) கல்வி

## பகுதி - II

16. மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி, மருத்துவரின் அன்பும் நம்பிக்கையும் உடைய சொற்களால் உடல் அளவிலும், மனதளவிலும் நலம் பெறுவார்.

17. ◆ தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள்.
 ◆ வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கி வந்து தருவார்கள்.

18. தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத வல்லவர்.

19. அ) புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் செயற்கை நுண்ணறிவுக் கருவியின் பெயர் என்ன?
 ஆ) தகவல்களைக் கொண்டு எளிதில் அழகாக கட்டுரை எழுதும் எழுத்தாளியின் பெயர் என்ன?

20. ◆ நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று மிகக்குறைந்த விலைக்குப் புத்தகங்கள் வாங்குவார்.
 ◆ உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு பட்டினி கிடந்திருக்கிறார்.

www.Padasalai.Net

- மரத்தலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம்.
- அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

31. அ) தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.

ஆ) பெய்மழை

இ) புவியில் காலமாற்றத்தால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

32. **குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

- தேனடையிலிருந்து விழும் தேன் துளியைப் போல சில மணித்துளிகளுக்கு ஒரு முறை நீர் 'சொட் சொட்' என விழுந்தது.
- விரும்பத்தக்க தென்றலைப் போலவும் மயிலிறகின் வருடல் போலவும் மெல்லிய குளிர் உடலில் ஓடும்.
- நீர் உள்ள தடாகத்திலே பல வகையான மீன்களும் தவளைகளும் தாவிக்குதிக்கும் போது ஏற்படும் ஓசையை ஒத்த 'சளப் தளப்' என்ற சத்தத்துடன் தேங்கிக் கிடந்த நீர்க் குட்டையில் குழந்தைகள் குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.
- அமைதியான நீரோட்டம் கொண்ட நதியானது இழுத்து வரும் சிறுசிறு கட்டை மற்றும் இதர பொருட்கள் போலக் குழந்தைகள் ஓடும் நீரில் காகிதக் கப்பல்களை விட்டு மகிழ்ந்தனர்.

33. **கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் என்னைக் கவர்ந்த மூன்று தொடர்கள்:**

**'புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது**
**இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது'**

- தன்னை ஒருவர் புகழ்வதினால் பெருமகிழ்ச்சியடைவதோ, இகழ்வதினால் மனம் வருந்துவதோ இல்லை என்பது பண்பட்ட மனத்திற்குச் சான்றாகிறது.

**'செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;**
**பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!'**

- என்பதிலிருந்து பணமோ, பதவியோ தன்னை ஒருபோதும் அடிமைப்படுத்த இயலாது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

**'எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை**
**என்ப தறிந்து ஏகுமென் சாலை!'**

- நல்லது எது கெட்டது எது என்பதறிந்து பகுத்தறிவுடன் செயல்படுவதற்குச் சான்றாகிறது.

34. **மனப்பாடம்:**

அ) **அன்னை மொழியே - பாடல்**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

www.Padasalai.Net

ஆ) **முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்**

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டோடு வட்டச் சுட்டி பதிந்தாட

35. **அலகிடுதல்:**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஊ/ழை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| உப்/பக்/கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| காண்/பர் | நேர் நேர் | தேமா |
| உலை/வின்/றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தா/ழா | நேர் நேர் | தேமா |
| துஞற்/று | நிரை நேர் | புளிமா |
| பவர் | நிரை | மலர் |

36. **நிரல்நிறை அணி:**

**அணி இலக்கணம்:**

சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**சான்று:**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணிப் பொருத்தம்:**

இக்குறளில் "அன்பும் அறனும்" என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி "பண்பும் பயனும்" என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணிக்குச் சிறந்த சான்றாகும்.

37. **கொண்டுகூட்டுப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகும்.

**சான்று:**

'ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு' - மயிலைநாதர் உரை

மேற்கண்ட பாடலில் உள்ளவாறு பொருள் கொள்ளாமல், ஆலத்து மேல குரங்கு, குளத்துல குவளை - என்று கருத்தைக்கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள் கொள்ளும் வகையில் அமைந்திருப்பதால் இஃது கொண்டு கூட்டுப் பொருள்கோளுக்குச் சான்று ஆயிற்று.

www.Padasalai.Net

| நாட்டு வளம் | மக்கள் வளம் |
|---|---|
| ஓடைகள் மட்டும் கலக்கமடையும். | மக்கள் கலக்கம் அடைவதில்லை. |
| மாங்காய் மட்டும் வடுப்படும். | மக்கள் வடுப்படுவதில்லை. |
| மலர்கள் மட்டும் பறிக்கப்படுகின்றன. | மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை. |
| காடுகள் மட்டும் (கொடியவனாய்) கொடி உடையதாய் இருக்கும். | மக்கள் கொடியவராய் இல்லை. |
| வண்டுகள் மட்டும் கள்(தேன்) உண்டு மயங்கும். | மக்கள் கள் உண்பதில்லை. |
| மலை மூங்கில் மட்டுமே வெறுமையாய் இருக்கும். | மக்களிடையே வெறுமை இல்லை. |
| வயலில் நெற்கதிர்கள் மட்டும் போராக எழுகின்றன. | சோழநாட்டில் போர் இல்லை. |
| நீண்ட மலைகளை இருள் சூழ்ந்திருக்கின்றன. | நாட்டில் வறுமை இருள் இல்லை. |
| மான்களின் கண்கள் மருள்கின்றன. | மக்கள் கண்களில் மருட்சியில்லை. |
| குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. | மக்கள் நிலை பிறழ்வதில்லை. |
| செவிலியரே சினங்கொள்வர். | வேறு யாரும் சினம் கொள்வதில்லை. |
| புலவர் பாட்டில் பொருள் மறைந்து இருக்கிறது. | சோழநாட்டில் யாரும் பொருளை மறைப்பதில்லை. |
| இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர். | மக்கள் தெருவில் ஆடுவதில்லை. |

**மன்னனின் சிறப்பும் பெருமையும்:**

மன்னன் மக்களுக்குக் காவல் தெய்வமாக, தாயாக, தந்தையாக இருக்கிறான். மகன் இல்லாதோர்க்கு மகனாக இருக்கிறான். உலக உயிர்களுக்கு உயிராக, விழியாக, மெய்யாக, புகழ் பெற்ற நூலாக புகழ் அனைத்துக்கும் தலைவனாக விளங்குகிறான்.

**முடிவுரை:**

சோழ அரசனின் பெருமையையும் அவன் காலத்தில் நாடு பெற்றிருந்த வளத்தையும் மெய்க்கீர்த்திப்பாடல் நயம்பட உரைக்கிறது.

39. அ) **மரம் இயற்கையின் வரம் - கட்டுரைப் போட்டி - நண்பனுக்கு வாழ்த்து மடல்:**
**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 - வினாத்தாள் 1 - வி.எண்: 39 (ஆ).**

**ஆ) தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுதல்**

அனுப்புநர்

மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

www.Padasalai.Net

பெறுநர்

தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை – 18.

ஐயா,

பொருள்: பள்ளித் தூய்மை குறித்த செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் – சார்பாக.

வணக்கம்! நாங்கள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். கடந்த 4 ஆண்டுகளாக நம் பள்ளியை மாணவர்களாகிய நாங்கள் நன்கு கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல் திட்டமாக தயாரித்துத் தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் வழங்கி நம் பள்ளியில் செயல்படுத்தி மாணவர்களாகிய எங்கள் கல்வி நலனையும் வருங்கால தலைமுறையினரின் கல்வி நலனையும் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி!

இடம் : சென்னை — இப்படிக்கு,
நாள் : 26.08.2022 — அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்.

40. **படம் உணர்த்தும் கருத்துகள்:**
- தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி.
- திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தம்பி.
- காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்.
- எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி.
- அருகில் இருக்கும் மனிதர்களோடு பேசாது, நவீன ஊடகங்களுக்கு இரையாகிப் போன மனிதர்களை இப்படம் சுட்டிக் காட்டுகிறது.

41. **நூலக உறுப்பினர் படிவம்.**
**பார்க்க: PTA 3 - வினாத்தாள் 4 - வினா எண்: 41.**

42. அ) **பள்ளியிலும் வீட்டிலும் நான் நடந்துகொள்ளும் முறைகள்:**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | அம்மாவுடன் சேர்ந்து பணிகளைச் செய்வேன். |
| எனக்கு தெரியாதவற்றை தெரிந்த மாணவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்றேன். | பாடத்தொடர்பான ஐயங்களை எனது உடன்பிறந்தவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வேன். |
| வகுப்பறைத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். | வீட்டுத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். |

www.Padasalai.Net

ஆ) **தலைப்பு: உழவின் சிறப்பு**

**முன்னுரை:**

'உழவு இல்லையேல் உலகம் இல்லை' விவசாயி தனக்கு வேண்டிய உணவை உற்பத்திச் செய்து பிறருக்கும் உணவை உற்பத்திச் செய்து தருகின்றனர். இப்படிப்பட்ட விவசாயின் உழவுக்கு உயிரூட்டுவோம் என்ற வகையில் சில கருத்துகளைக் காண்போம்.

**பண்பாட்டின் மகுடம்:**

உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்பது பழமொழி. ஆம் அனைவரும் கணக்கு பார்ப்பது போல உழுகின்றவனும் கணக்குப் பார்த்தால் உணவு கூட மிஞ்சாது.

ஔவையார், இளவரசரே வாழ்க என்று வாழ்த்தவில்லை. அரசே உன் வரப்புகள் உயர்க என்று தான் வாழ்த்துவார்.காரணம், வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோனுயர்வான் என்ற உழவையே உவமையாகக் கூறுவார்.

**உழவின் சிறப்புகள்:**

உலகில் நடைபெறும் தொழில்களில் தலைமைத் தன்மை வாய்ந்தது உழவுத் தொழில் எனலாம். இதனால்தான், 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' (1031) என்று வள்ளுவர் கூறினார்.

உழவுத் தொழிலின் மேன்மையை உணர்ந்தே அரசாங்கமும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நல்ல பல திட்டங்களின் வழியாகவும், தற்காலத்தில் அதற்கு மாற்றாக நிதி ஆயோக்கின் வாயிலாகவும் வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**உழவரே சிறந்தவர்:**

உழுதலாகியத் தொழிலைச் செய்யும் வேளாண் மக்களே உரிமையோடு வாழ்கின்றனர் என்று எண்ணத்தக்கவர்கள். மற்ற பணிகளைச் செய்பவர்கள் எல்லாம் யாரையாவது தொழுது, தங்களின் தொழிலைச் செய்து வருபவர்கள் ஆகின்றார்கள்.

**முடிவுரை:**

உலகத்திற்கு அச்சாணி போன்றவர்கள் உழவர்கள். அவர்களின் உளம் மகிழ நிலமென்னும் தாய் தானிய வளத்தை அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கட்டும்.

★★★

www.Padasalai.Net

# PTA மாதிரி வினாத்தாள் - 5

வினாத்தாள் 6

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி    மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **செய்தி - 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 15ஆம் நாளை உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

**செய்தி - 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பொருமையே என்கிறது காற்று.**

**செய்தி - 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!**

அ) செய்தி 1 மற்றும் சரி    ஆ) செய்தி 1,2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி    ஈ) செய்தி 1,3 ஆகியன சரி

2. **சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன. இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை - நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
ஈ) குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் - பனை, திணை

3. **கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?**

அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வெவ்வேறு வடிங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

4. **‘வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்’ இவ்வடி குறிப்பிடுவது ............**

அ) காலம் மாறுவதை    ஆ) வீட்டைத்துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை    ஈ) வண்ணம் பூசுவதை

5. **‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’**
**- பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து -**

அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.
ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்.

www.Padasalai.Net

**விடைகள்** 

## PTA மாதிரி வினாத்தாள் - 5

**வினாத்தாள் - 6**

### பகுதி - I

1. ஈ) செய்தி 1,3 ஆகியன சரி
2. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
3. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
4. இ) இடையறாது அறப்பணி செய்தலை
5. அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.
6. அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1
7. ஈ) 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது
8. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
9. ஆ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
10. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
11. அ) தாமதப்படுத்துதல்
12. ஈ) தனிப்பாடல் திரட்டு
13. அ) இரட்டுற மொழிதல் அணி
14. ஆ) கடல்
15. ஆ) அணிகலன்

### பகுதி - II

16. ◆ கி.பி.முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ்.
 ◆ இவர் பருவக்காற்றின் உதவியால் முசிறித் துறைமுகத்திற்கு புதிய வழியைக் கண்டுபிடித்தார்.
 ◆ யவனர் இப்பருவக்காற்றிற்கு அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையே சூட்டினர்.

17. ◆ பாசவர் - வெற்றிலை விற்பவர்கள்
 ◆ வாசவர் - நறுமணப்பொருட்களை விற்பவர்கள்
 ◆ பல்நிண விலைஞர் - பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்
 ◆ உமணர் - உப்பு விற்பவர்

18. அ) சாலை விதிகளில் முதன்மையானது எது?
 ஆ) ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டிய சான்றிதழ்கள் யாவை?

19. ◆ அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சித் துணைபுரிந்தன.
 ◆ அறம் கூறு அவையம் பற்றி, 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.
 ◆ மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது மதுரைக்காஞ்சி.

20. ◆ சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் என்று குறிப்பிடப்படுவோர் பெண்கள்.
 ◆ இவர்கள் அமைதியான முறையில் இவ்வுலகைத் தாங்கி நிறுத்த போராடும் போராளிகள் ஆவர்.

www.Padasalai.Net

21. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

22. அறியேன் = அறி + ய் + ஆ + ஏன்
அறி – பகுதி; ய் – சந்தி; ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது;
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

23. 'தம்பி, எங்கே நிற்கிறாய்? தாங்கள் கூறிய இடத்தில்தான் அண்ணன்! எதிரே ஒரு தேநீர் கடை இருக்கிறது'.

24. அ) Epic Literature – காப்பிய இலக்கியம் ஆ) Folk Literature – நாட்டுப்புற இலக்கியம்

25. தீவக அணியின் வகைகள்:
- மூன்று வகைப்படும்.
- முதல்நிலைத் தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத் தீவகம்.

26. அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சுத் தடைப்பட்டது.
ஆ) அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

27. கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடை

28. "தேனிலே ஊ**று**ய செந்தமி**ழி**ன் – சுவை
தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயி**ர்** உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி யு**ண**ர்ந்தி**ன்** பு**று**வோமே"

## பகுதி - III

29. அ) பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன.
ஆ) ◆ மக்களின் கவலையைப் போக்குகின்றன.
◆ சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.
இ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பிரித்துப் பார்க்கக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

30. **முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்:**
- எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை.
- தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.
- "ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம். ஓர் எழுத்தாளன் ஆத்ம சக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று

www.Padasalai.Net

நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்'' (1966) என்று பாரீசுக்குப் போ என்னும் புதினத்தின் முன்னுரையில் ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

31. **வாழை இலையில் விருந்து - தமிழர் பண்பாட்டுக் கூறு:**

- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.
- உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகிய பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும்.
- இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலானவைகளையும், சிறிய உணவு வகைகளையும் வைத்தனர்.
- இலையின் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான உணவு வகைகளை வைப்பர். நடுவில் சோறு வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவர்.

32. **முதல் மழை விழுந்தவுடன் நிகழ்தல் - ஏர்புதிதா? கவிதை:**

- முதல் மழை விழுந்தவுடன் நிலம் ஈரத்தால் பண்பட்டது.
- விரைந்து சென்று பொன் போன்ற ஏரிலே காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர். ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.
- மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

33. **நவீன கவிதையில்:**

பூவின் மென்மை, அழகு, நளினத்தன்மை, எதற்கும் வருந்தாமல் சிரிக்கும் மலரைப் பெண்ணோடு ஒப்பிட்டுள்ளார்.

**நாட்டுப்புறப் பாடலில்:**

பெண் தெய்வமாகிய மாரியோடு ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது.

| நவீன கவிதை கருத்து | நாட்டுப்புறப் பாடல் கருத்து |
|---|---|
| ◆ பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பின் கழுத்து முறிவது போலப் பெண்களின் கழுத்து முறியும். | ◆ மாரியாகிய பெண் தெய்வத்திற்குக் கையாலே பூப்பறித்தால் காம்பு அழுகிவிடும் என்று கையாலே பூப்பறிக்கவில்லை. |
| ◆ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண் தளர்ந்தால் வாழ்வும் நழுவும்.<br>◆ வாசலிலே மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப் போல பெண்ணும் வருத்தங்கள் வந்தபோது அவற்றைச் சுமையாகக் கருதாமல் குடும்பத்தைக் காப்பாள். | ◆ விரலால் பூப்பறித்தால் பயனற்றதாய் வெம்பிவிடும் என்று விரலால் பூப்பறிக்கவில்லை.<br>◆ மேற்கண்ட காரணத்தால் மாரியாகிய பெண் தெய்வத்துக்குத் தங்கத் துரட்டி கொண்டு பூப்பறித்தார். |

மேற்கண்ட இரு பாடலிலும் பெண்ணை மலரோடு ஒப்பிட்டுப் பாடுவதை அறியமுடிகிறது.

www.Padasalai.Net

39. அ) **உறவினருக்குக் கடிதம் எழுதுதல்.**

திருச்சி,
26.08.2022.

அன்புள்ள சித்தப்பாவிற்கு,

இரகு எழுதிக்கொள்வது, நலம் நலமறிய ஆவல்.

நான் இன்று மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறேன். நேற்று வகுப்பு முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தேன் பள்ளித்திடலில் ஒரு பணப்பை கிடந்தது. ஐயோ இவ்வளவு பணம் இருக்கிறதே என்று பையை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் கொடுத்தேன். அவர் அலுவலக ஊழியர் வசூலித்த பணம் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தவற விட்டுவிட்டாராம் என்றார்.

மறுநாள் சிறப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்து என் நேர்மையைப் பாராட்டி சன்மானத் தொகையைப் பரிசாகவும், 'நேர்மையாளன் ரகு' என்று பாராட்டுப் பத்திரத்தையும் எனக்குக் கொடுத்தார்.

அது மட்டுமில்லாமல் என்னைப் பள்ளி மாணவர் தலைவராக்கினார். நேர்மைக்கு எப்போதும் உயர்வு உண்டு. அதற்கு 'இரகுவே' சான்று என்று என்னைப் பாராட்டினார். இந்நிகழ்வின் மகிழ்ச்சியை உங்களுடனும், சித்தி, தங்கையுடனும் இக்கடிதம் மூலம் பகிர்ந்து கொள்வதற்கு மகிழ்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
இரகு.ம.

உறைமேல் முகவரி:

பெறுநர்
வீ. ஆனந்தன்,
72, நேரு நகர்,
சேலம் - 2.

ஆ) **மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுதல்**

அனுப்புநர்
த. இலக்கியன்,
5, பாரதி நகர்,
சேலம்-5.

பெறுநர்
மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சேலம்-1.

ஐயா,

பொருள்: கடும்புயலின் பாதிப்பிலிருந்து மீட்பு நடவடிக்கை வேண்டுவது தொடர்பாக.

www.Padasalai.Net

வணக்கம்.

கடந்த வாரம் வீசிய கடும்புயலின் காரணமாக எங்கள் பகுதி மிகுந்த பாதிப்புக்குள்ளாகி உள்ளது. பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்தும், சாலைகள் மிகுந்த சேதமாகியும், மின்கம்பங்களில் ஏற்பட்டுள்ள பழுதின் விளைவாக மக்கள் பெரும் இன்னலைச் சந்தித்து வருகின்றனர். எனவே தாங்கள் அருள் கூர்ந்து போர்க்கால அடிப்படையில் மீட்பு நடவடிக்கைகள் எடுத்து உதவியருள வேண்டுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

சேலம் இப்படிக்கு,
26.08.2022 தங்கள் உண்மையுள்ள,
த. இலக்கியன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சேலம்-1.

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்:**

ஏ! மானிடா......... ஏ! மானிடா
என்னை (மரத்தை) அழித்தாய்
எனக்கும் ஒரு காலம் வரும்
பள்ளிக்குழந்தைகள்
புத்தகப்பை சுமப்பது போல
உயிர்வளிக்காக
என்னையும் நீ சுமப்பாய்.......
உயிர்வாழ்வதற்கு.

41. **பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்.**
**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 19-20 - வினாத்தாள் 1 - வினா எண் 41.**

42. அ) **நூலின் தலைப்பு : நமக்குள் சில கேள்விகள் நூலின் மையப்பொருள்**

நமக்குள் எழும் அறிவார்ந்த கேள்விகளுக்கு இறையன்புவின் ஆளுமைமிக்க பதில்களாய் இந்நூல் அமைந்துள்ளது. பொது அறிவுத் தகவல்கள், வாசகர்கள் மனநிலை மேம்பட செம்மையடைய உதவிடும் நூலாக இந்நூல் திகழ்கிறது.

**மொழிநடை:**

நூலில் உள்ள அனைத்துக் கேள்விகளும் பதில்களும் பயனுள்ளவையாக அமைந்து, சில எள்ளல் சுவையுடனும், பல வாழ்வியல் சிந்தனைகளை உள்ளடக்கியதாகவும் திகழ்ந்து அனைவருக்கும் ஏற்ற மொழிநடையைக் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது.

**சிறப்புக்கூறு:**

எழுப்பப்படும் கேள்விகளுக்கு ஏற்ற பதிலை வழங்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

**சான்று:**

தமிழைக் கற்றதில் இன்றைய தலைமுறையின் முயற்சி எவ்வாறு உள்ளது?

ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்த தலைமுறை. இப்போது வாரிசுகளுக்குத் தமிழை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கற்றுத் தருகின்ற நிலையில் நம் தாய்மொழியின் தலையெழுத்து இருக்கிறது. இன்றைய இளைய தலைமுறையினரில் பலர் எனக்கு டமில் சரியா வராது என்று பேசும் நிலையிலும், தமிழ் வாசிக்கவே தெரியாத நிலையிலும் இருப்பது வெட்கக்கேடு இந்த அவல நிலை மாற வேண்டும்.

www.Padasalai.Net

- சிகிச்சை இல்லாத போதைப் பொருள் எது? புகழ்.

உண்மைதான். பலர் புகழ்போதையில் அலைவதைக் கண்முன் காண்கிறோம். மனதிற்குள் அவர்களைக் கேலி பேசுகின்றோம்.

**நூல் ஆசிரியர்:**

முதுமுனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப.

ஆ) **மொழிபெயர்த்தல்:**

மரியாதைக்குரியவர்களே!, என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாயிரம் வருடத்திற்கு முன் கலாச்சாரத்திலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர்களின் கலாச்சாரம் இந்தியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தில் வேரூன்றி உள்ளது. நம் கலாச்சாரம் பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் மேம்படுத்தி உள்ளது. நாம் நம் கலாச்சாரத்தைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நன்றி!

**பகுதி - V**

43. அ) **சங்க இலக்கியங்களின் அறக்கருத்துகள் இன்றும் தேவையே:**

சங்க இலக்கியப் பாடலடிகள் கீழ்க்காணும் ஐந்தின் அடிப்படையில் அறச்செய்திகளை வலியுறுத்துகிறது.

- வறுமை
- நிலையான செல்வம்
- நேரிய ஆட்சி
- வாய்மை
- ஈகை

**'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.....'** - *புறநானூறு*

இப்பிறப்பில் அறம் செய்தால், அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை.

**'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**
**அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்'**

மன்னருடைய செங்கோலும் வெண் கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசின் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்.

**'செல்வத்துப் பயனே ஈதல்'** - *புறநானூறு*

வீரத்தைப் போலவே ஈகையையும் தமிழ் நூல் போற்றியது. ஈகையும் ஓர் அறச்செயலே. செல்வத்தின் பயன் கொடுத்து மகிழ்வதே என்று வாழ்ந்தனர்.

**'சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே'** - *நற்றிணை*

பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி உதவுதலே பண்பு. பிறர் துன்பம் தீர்ப்பதே உண்மையான செல்வம் ஆகும்.

www.Padasalai.Net

கலைகள், ஆய்வு நெறிகள், கோட்பாடுகள் ஆகிய அனைத்தையும் பிறமொழிகளில் மாற்றம் செய்வதே மொழிபெயர்ப்பு ஆகும்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

**'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ் மொழி பெயர்த்தல் வேண்டும்'**

பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய காப்பியங்கள் வடமொழி கதைகளைத் தழுவி படைக்கப்பட்டன. சேக்ஸ்பியரின் கவிதைகள் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. தாகூரின் கீதாஞ்சலி நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துள்ளன.

**பாரதியின் கனவு:**

சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை எல்லா இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளன. அவ்வகையில் தமிழில் பல நூல்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனைப் பாரதியார்,

**'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'** என்றார். பாரதி கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும்.

**மொழிபெயர்ப்புக் கல்வி:**

மொழிபெயர்ப்பைப் கலையாகக் கொள்ளாமல் கல்வியாகக் கொள்ளவேண்டும். மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாக பெற முடியும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை:**

**'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்'**

பிறமொழிகளில் இருந்து தமிழிலும் தமிழிலிருந்து பிறமொழிகளிலும் இலக்கியங்கள் பெருக வேண்டும் என்பது பாரதியின் ஆசை. அதனை நிறைவேற்றுவோம்.

பேசக்கூடிய மொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும். இதற்கு மொழிபெயர்ப்புக் கல்வி இன்றியமையாததாகும்.

**ஆ) அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைப் பற்றிய கட்டுரை:**
**பார்க்க: PTA 2 - வினாத்தாள் 3 – வினா எண்: 45. (ஆ)**

★★★

www.Padasalai.Net

# PTA மாதிரி வினாத்தாள் - 6

வினாத்தாள் 7

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **''பாடுஇமிழ் பனிக்கடல் பருதி'' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி –**
   அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

2. **முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள்**
   அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், தினை
   இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல்

3. **''காலின் ஏழடிப் பின் சென்று'' – என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி –**
   அ) விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்.
   ஆ) விருந்தினரை ஏழு அடி வரை சென்று வழியனுப்பினர்
   இ) எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்.
   ஈ) ஏழுநாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்புவர்.

4. **ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர்.**
   **– இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?**
   அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
   ஆ) ஒயிலாட்டத்தில் ஒருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   இ) ஒயிலாட்டம் ஒருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனது.

5. **அன்பால் கட்டினார். அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –**
   அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
   இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

6. **குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் .............**
   அ) திரு.பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ.நேசமணி
   இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந.முத்துசாமி

7. **காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .............**
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
   ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்.
   ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.

www.Padasalai.Net

8. **வெளிநாட்டில் வேலை செய்துக்கொண்டிருக்கம் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ............ வருந்திக்கொண்டிருந்தாள். - தொடரில் விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.**
அ) தாமரை இலை நீர்போல்
ஆ) வாழையடி வாழையாக
இ) கண்ணினைக் காக்கும் இமை போல
ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல

9. **வெஃஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**
அ) ஒற்றளபெடை, சொல்லிசையளபெடை
ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

10. **"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" -இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள்.**
அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
இ) உரிய காலத்தில் காற்றைப்போல் செயல்பட வேண்டும்.
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

11. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் -**
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

*"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"*

12. **ஊழ் ஊழ் - இலக்கணக் குறிப்பு**
அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை
இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை

13. **பாடலின் ஆசிரியர்**
அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார்
இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்

14. **பாடலில் உணர்த்தப்படும் கருத்து**
அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் செய்தி
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்

15. **விசும்பு, இசை, ஊழி - பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே**
அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்

www.Padasalai.Net

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6

29. 'நீர்' தன்னைப்பற்றி பேசினால் ............ உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?
ஆ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?
இ) யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"
– இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6
**34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது"
– நாகூர்ரூமி வெளிப்படுத்தும் மனிதத்தை அவரது கவிதை வழியாகக் குறிப்பிடுக.

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**
அ) "தூசும் துகிரும் ஆரமும் அகிலும்" எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
**(அல்லது)**
ஆ) "அன்னைமொழியே" எனத்தொடங்கும் பெருஞ்சித்திரனாரின் பாடல்.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6

35. "பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க.

36. தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.

37. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ) 'முதல் மழை விழுந்ததும்' – தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை 'ஏர் புதிதா?' கவிதை கொண்டு விவரித்து எழுதி, 'பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம்' என்பதையும் விளக்குக.

**(அல்லது)**

www.Padasalai.Net

ஆ) தமிழையும் கடலையும் ஒப்பிட்டு இரட்டுற மொழிதலை சந்தக்கவிமணி தமிழழகனார் வழி நின்று விளக்குக.

39. அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'பள்ளித்தூய்மை - செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி மாணவர்களின் சார்பாக மாணவர் தலைவரான நீங்கள், உங்கள் பள்ளியின் தலையாசிரியருக்கு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் வெளிப்படுத்துக.



41. கொடுக்கப்பட்ட மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவரின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவரின் கையெழுத்து

www.Padasalai.Net

குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

45. அ) விசும்பின் துளியும் பசும்பல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காண்போம் – மரம் நமக்கு வரம் – மழைநீர் உயிர் நீர்
– இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'இயற்கையைப் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று படைக்க.
குறிப்புகள்: முன்னுரை – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் – அறம் என்பதே மனிதம் – முடிவுரை.

★★★

**விடைகள்** **வினாத்தாள் - 7**

## PTA மாதிரி வினாத்தாள் - 6

### பகுதி - I

1. அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
2. இ) வரகு, சாமை
3. ஆ) விருந்தினரை ஏழு அடி வரை சென்று வழியனுப்பினர்.
4. ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றது.
5. அ) வேற்றுமை உருபு
6. ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
7. அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
8. ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல
9. அ) ஒற்றளபெடை, சொல்லிசையளபெடை
10. ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
11. ஈ) அதியன்; பெருஞ்சாத்தன்
12. இ) அடுக்குத்தொடர்
13. அ) கீரந்தையார்
14. ஆ) அறிவியல் செய்தி
15. இ) வானம்,பேரொலி,யுகம்

### பகுதி - II

16. அ) மொழி வளர்ச்சிக்கு புதுக்கூறுகளை உருவாக்குவது எது?
ஆ) எந்தெந்த மொழிகளில் தமிழ் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

17. ◆ காலக்கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.
◆ வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

18. ◆ செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.
◆ சமையல் செய்யும் செயற்கை நுண்ணறிவு எந்திரம்.
◆ விண்மீன்களைக் கணக்கிடும் செயற்கை நுண்ணறிவுக் கருவி.

www.Padasalai.Net

30. அ) போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுகுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

ஆ) தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது.

இ) பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

31. **இடம்சுட்டிப் பொருள் விளக்கம்:**

**இடம்:**

'ம.பொ.சி'யின் தன் வரலாற்றுப் பகுதியில் சிற்றகல் ஒளி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்:**

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திர மாநிலத் தலைவர்கள் விரும்பினர். அதனை எதிர்த்து ம.பொ.சி. கூறிய கூற்று இது.

**விளக்கம்:**

மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அப்பொழுது, தமிழ் மாநிலத்தின் தலைநகர் 'சென்னை' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தனர்.முன்மொழிந்து 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று ம.பொ.சி முழங்கினார்.

**32. நாகூர்ரூமி வெளிப்படுத்தும் மனிதம்:**

"அடுத்தவேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம்கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வைத் தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது'' என நாகூர்ரூபி சித்தாள்களின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது என்பதின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

33. **மாளாத காதல் நோயாளன் போல் - உவமை சுட்டும் செய்தி:**

**உடலில் ஏற்பட்ட புண்:**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.

**நீங்காத துன்பம்:**

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன்.

34. **மனப்பாடம்**

அ) **சிலப்பதிகாரப் பாடல்**

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா

www.Padasalai.Net

வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

ஆ) **அன்னைமொழியே பாடல்**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

35. **அலகிடுதல்:**

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| பண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பா/டற் | நேர் நேர் | தேமா |
| கியை/பின்/றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண்/ணோட்/டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண்/ | நேர் | நாள் |

36. **தீவக அணி மற்றும் தீவக அணியின் வகைகள்:**
**பார்க்க: PTA 1 – வினாத்தாள் 2 – வினா எண்: 37.**

37. **வெண்பாவின் பொது இலக்கணம்:**

- வெண்பா செப்பல் ஓசை பெற்று வரும்.
- ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

## பகுதி - IV

38. **'முதல் மழை விழுந்ததும்' – 'ஏர் புதிதா?' கவிதை கொண்டு விவரித்தல்.**

- உழவர் பெருமக்களை மனம் மகிழச்செய்யும் வகையில் முதல் மழை நிலத்திலே விழுந்து விட்டது.
- மழையினால் நம் நிலம் பண்பட்டுள்ளது.
- சோம்பலினால் இன்னும் உறங்கிக் கொண்டு இருக்காதீர்கள்.
- விடிந்தது எழுந்து ஏரைப்பூட்டி வயலுக்கு விரைந்து செல்.

www.Padasalai.Net

- காடு கரையும் நமக்குப் புதிதன்று. காளைகளும் புதியவையல்ல. ஏர் நமக்குப் புதிதன்று.
- பொன் ஏர் தொழுது, மாட்டைப் பூட்டி நிலத்தை உழுவோம்.
- மண்புரளும் வகையில் உழுவோம்.
- மழை பொழியும் நிலமும் குளிரும்.
- புதிய ஊக்கத்துடனும், புதிய வலுவுடனும் உழைப்போம்.
- நாற்று நிமிர்ந்து வளரும். எல்லை தெய்வம் நம்மைக் காக்கும். கவலைகள் இனி இல்லை. புதிய விடியலுக்கு அடையாளமாய்க் கிழக்கும் வெளுத்து விட்டது.
- வேளாண்மை செழிக்க, மானுடம் தழைக்க சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பண்பாட்டு நிகழ்வு பொன் ஏர் பூட்டுதல்' தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

ஆ) **தமிழையும் கடலையும் ஒப்பிடுதல்:**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலமும் மேவலால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

39. அ) **ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு கடிதம் எழுதுதல்.**

தஞ்சாவூர்,
26.08.2022.

அன்புள்ள மாமா,

நலம். நலம் அறிய ஆவல்.

தாங்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறேன். முக்கியச் சாலை விதிகள் பற்றி என்னுடைய பள்ளியில் விழிப்புணர்வு முகாம் வாயிலாகக் கற்றுக் கொண்டதை இக்கடிதத்தில் தங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். சாலைகளில் இடப்பக்கமாக மட்டுமே வண்டிகளை ஓட்டிச் செல்ல வேண்டும். சாலைகளின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்க வேண்டும். மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கப்பட்டை அணிய வேண்டும். அதுவே உயிர்ப் பாதுகாப்பு. சிவப்பு விளக்கைக் கண்டவுடன் சாலையில் நிறுத்தக் கோட்டுக்கு முன்பாக ஊர்தியை நிறுத்த வேண்டும்.

எனவே தாங்களும் இவற்றை மனத்தில் நிறுத்தி விபத்தில்லாப் பயணமாக அமைத்துக் கொள்ள வேண்டுமாறு விரும்புகிறேன்.

www.Padasalai.Net

**தேவி** : யாருக்குத் தெரியும்? வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம்.

**மலர்** : வருங்காலத்தில் நிறைய நாடுகள் இவ்வகையான செயற்கைக்கோளை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன்.

**தேவி** : நல்ல செய்தி நாம் செயற்கை நிலவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரண உதவிகளைச் செய்ய வழி செய்கிறது.

## பகுதி - V

43. அ) **மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் காணல்.**

**அறிமுகம்:**

நிகழ்கலை கலைஞர்களில் கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டும் கலைஞர்களின் நேர்க்காணல்.

**கலைகள்:**

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 1,026 கலைகள் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அவை இன்றைக்கு ஒவ்வொன்றாக மறைந்து வருவதோடு குறைந்துவிட்டதையும் அறிய முடிகிறது.

**பெரிய சவால்:**

நிகழ்கலை கலைஞர்கள் சிறுசிறு குழுக்களாக ஒருங்கிணைக்கப்படாமல் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். எப்போதாவது கிடைக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி நிகழ்கலைகளை நிகழ்த்தினாலும், அதனால் வாழ்வை நடத்துவதற்குப் போதுமான வருமானம் கிட்டுவதில்லை.

தொலைக்காட்சி மற்றும் நவீன மின்னணு ஊடகங்கள் கோலோச்சுகின்ற இக்காலக்கட்டத்தில் நாட்டுப்புறக் கலைகளும், அவற்றை நிகழ்த்துகின்ற கலைஞர்களும் பெரிய சவால்களை எதிர்கொள்ளும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**காப்பாற்றுதல்:**

அரசும் மக்களும் தங்கள் கலைகளை ஊக்குவித்து, வாய்ப்பளித்து, வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதமாய் உதவினால் மட்டுமே கலைகளையும், கலைஞர்களையும் காப்பாற்ற முடியும்.

**அரசின் உதவி:**

தமிழகமெங்கும் உள்ள கலைஞர்களை ஒவ்வொரு கலையின் அடிப்படையிலும் ஆவணப்படுத்தி அவர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்குவது கிராமம் கிராமமாகத் தேடிச் சென்று கலைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும். எல்லாக் கலைஞர்களுக்கும் அடையாள அட்டை வழங்கி ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**செய்ய வேண்டுவது:**

நிகழ்கலைகளை ஆவணப்படுத்துவதற்கும், கலைகள் குறித்த வகுப்புகள், கருத்தரங்குகள், விவாதங்கள், உரையாடல் நடத்தவும் நிகழ்கலைகளுக்கான

www.Padasalai.Net

தனிப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, நிகழ்கலைகளுக்கான கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**நிறைவு:**

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கும் நிகழ்கலைகளையும், கலைஞர்களையும் ஆதரித்துக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உரியது என்பது திண்ணம்

ஆ) **எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'இன்னொரு முகம்'.**

எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'இன்னொரு முகம்' – கவிஞர். ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய ஜெயகாந்தனின் கவிதை:**

"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"

**தொடுத்த கேள்விகளும் ஜெயகாந்தன் கொடுத்த பதில்களும்:**

**கேள்வி : சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை? (பேட்டி – திரு. கிருஷ்ணமணி, 1966)**

பதில் : நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

**கேள்வி : உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது?**

பதில் : மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

**கேள்வி : இந்த வயதில் தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது?**

பதில் : காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

44. அ) **கருந்துளை பற்றி ஸ்டீபன் ஹாக்கின் கூற்று:**

நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்துகொண்டே சென்று அளவற்றதாகிறது.

www.Padasalai.Net

**மாணவர்கள் இருவரும் :** வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம்!

**குகன்** : ஐயா! உள்ளே வரலாமா?

**ஆசிரியர்** : வாருங்கள்! வந்ததன் காரணம் கூறுங்கள்.

**செழியன்** : ஐயா, வாழ்வில் முன்னேற சில குறிப்புகளைச் சொல்லி அறிவுரை கூறுகிறேன் என்றீர்களே... அதற்காகத்தான் வந்தோம்.

**ஆசிரியர்** : நல்லது. உங்களுக்கு மூன்று உதாரணங்கள் கூறப்போகிறேன். முதலில் கொக்கைப் போல' வாய்ப்பு கிட்டும் வரை கொக்கைப் போல காத்திருக்க வேண்டும். வாய்ப்பு கிட்டியவுடன் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதைத்தான் வள்ளுவர், 'கொக்கொக்க' எனப் பாடியுள்ளார்.

**குகன்** : சரிங்க ஐயா! இனிமேல் நாங்கள் அவசரப்பட்டு எதையும் சிந்திக்காது செயல்பட மாட்டோம்.

**ஆசிரியர்** : இரண்டாவதாக, 'கோழியைப் போல்!'

**செழியன்** : ஆமாங்க ஐயா! அதென்ன கோழியைப் போல்......

**ஆசிரியர்** : கோழி, குப்பையைக் கிளறினாலும் குப்பைக்குள் இருந்தாலும் தனக்குத் தேவையான 'உணவை மட்டுமே' கொத்தித் தின்னும். அதுபோல இந்த சமுதாயத்தில் உங்களைக் கெடுக்கும் குப்பைகளைப் போல பல இருந்தாலும் உமக்குத் தேவையான நன்மணிகளை மட்டும் தேர்ந்தெடுத்து வாழ வேண்டும்.

**இருவரும் :** நன்றாகப் புரிந்தது ஐயா!

**ஆசிரியர்** : மூன்றாவதாக, உப்பைப் போல...

**குகன்** : ஆம். ஐயா, 'உப்பைப்போல' என்பதன் விளக்கம் தாருங்கள்.

**ஆசிரியர்** : கூறுகிறேன்! உப்பைக் கண்ணால் பார்க்கலாம். சுவையை நாவில் இட்டு உணரலாம். அதுபோல ஒவ்வொருவரின் வெளித்தோற்றம் எப்படியிருப்பினும், உங்களைச் சார்ந்தவரின் குணநலன்களை ஆராய்ந்து உணர்ந்து அறிந்து நடந்து கொள்ள வேண்டும். மிக நெருங்கி இருந்தாலும், மிக தூரம் இருந்தாலும் துன்பந்தான். உப்பு குறைவானாலும் உண்ண முடியாது. அதிகமானாலும் உண்ண முடியாது. அளவோடு இருந்தால்தான் ருசிக்க முடியும். நாமும் அளவோடு இருப்போம்.

**இருவரும் :** மிக்க மகிழ்ச்சி ஐயா! எம் அறிவுக் கண்களைத் திறந்து நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி விட்டீர்கள்.
நன்றி! ஐயா!

45. அ) **தலைப்பு: இயற்கையைக் காப்போம்**
**பார்க்க: PTA 3 - வினாத்தாள் 4 – வினா எண்: 45 (அ).**

ஆ) **தலைப்பு: அறத்தான் வருவதே இன்பம்**
**பார்க்க: PTA 2 - வினாத்தாள் 3 – வினா எண்: 45 (அ).**

★★★

www.Padasalai.Net

வினாத்தாள் 8

# அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2020

வகுப்பு: X

தமிழ்

## பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்**

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

2. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

3. **'பெரிய மீசை' சிரித்தார் – இதில் அமைந்துள்ள தொகையின் வகை எது?**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

4. **'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

5. **திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்!

ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!

ஈ) 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

6. **''உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்'' – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

www.Padasalai.Net

7. **கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது**
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

8. **குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்**
அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம்
இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு

9. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

| | |
|---|---|
| 1) வினைமுற்று | i) கெடு |
| 2) தொழிற்பெயர் | ii) கட்டு |
| 3) முதனிலைத் தொழிற்பெயர் | iii) எய்தல் |
| 4) வினையடி | iv) வந்தான் |

அ) 1-iv, 2-iii, 3-ii, 4-i ஆ) 1-iii, 2-i, 3-iv, 4-ii
இ) 1-iv, 2-iii, 3-i, 4-ii ஈ) 1-i, 2-iii, 3-ii, 4-iv

10. **பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.**
தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.
அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ) தங்கக் கட்டிகளை ஈடாக ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

11. **இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ------.**
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்*
*பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்*
*பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்*
*கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்*

12. **பாடலின் இலக்கிய வகை**
அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை ஈ) பதினென்கீழ்க்கணக்கு

13. **'கிண்கிணி' என்னும் அணிகலன்**
அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14. **குண்டலமும் குழைக்காதும் - இலக்கணக் குறிப்பு தருக.**
அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

www.Padasalai.Net

15. **சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்

இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8**

16. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது?

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) ம.பொ.சி அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.

ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

18. உறங்குகின்ற கும்பகன்ன ‘எழுந்திராய் எழுந்திராய்’
காலதூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்?
எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20. ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக.

21. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு 2

**குறிப்புகள்: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10**

22. கலைச் சொற்கள் தருக. அ) Artifacts ஆ) Myth

23. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
– இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.

24. பாலகுமாரன் புதினங்கள் இருக்கிறதா? என்று நூலகரிடம் வினவுவது எவ்வகை வினா? பிரபஞ்சன் புதினங்கள் இருக்கிறது என்று நூலகர் கூறுவது எவ்வகை விடை?

25. “தம்பீ! எங்க நிக்கிறே?”
“நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.”
உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

26. ‘மலைந்து’ – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. “காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ”
இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களை எடுத்தெழுதுக.

28. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதி, தொடரில் அமைக்க.

www.Padasalai.Net

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
36. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.
37. நிரல்நிறை அணியை விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25**

38. அ) காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் கீழ்க்காணும் குறிப்பினைக் கொண்டு உங்கள் இலக்கிய உரையைத் தொடர்க.

குறிப்பு: அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கைக் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டும் கம்பனின் கவி நயம் ........

39. அ) நீங்கள் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலைப் படிக்குமாறு பரிந்துரை செய்து உங்கள் நண்பருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்' - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதற்குத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் பெறக் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. எண்-6, பாதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

ஆ) மொழிபெயர்க்க:

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the one fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43. அ) விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்’ என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) “புயலிலே ஒரு தோணி” கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) “பாய்ச்சல்” கதையில் அழகு தன்னை மறந்து ஆடியதைப் போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.

45. அ) மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக.

முன்னுரை - என் இளமைப் பருவம் - விடுதலைப் போராட்டத்தில் நான் - பொது நலமே தன்னலம் - எளிமையே அறம் - நாட்டின் முன்னேற்றமே நோக்கம் - எளியோரின் அன்பே சொத்து - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு, ‘மக்கள் பணியே மகத்தான பணி’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

★★★

www.Padasalai.Net

## விடைகள் — அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2020 — வினாத்தாள் - 8

### பகுதி - I

1. ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
2. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
3. இ) அன்மொழித் தொகை
4. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
5. ஆ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
6. ஆ) மோனை, எதுகை
7. ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
8. ஆ) வனத்தின் நடனம்
9. இ) 1-iv, 2-iii, 3-i, 4-ii
10. இ) தங்கக் கட்டிகளை ஈடாக
11. இ) வலிமையை நிலைநாட்டல்
12. ஆ) சிற்றிலக்கியம்
13. இ) காலில் அணிவது
14. அ) எண்ணும்மை
15. அ) பட்ட, பொட்டொடு

### பகுதி - II

16. விரும்பத்தக்க இரக்கக்குணம் கொண்டவர்கள் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவர். ஏனெனில் பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணுவர்.

17. அ) ம.பொ.சி எவ்வாறு இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்?
ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் என்ன உணவு கொடுத்தனர்?

18. 
- ‘உறங்குகின்ற கும்பகன்னா உன் பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டதால் அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்’ என்கிறார்கள்.
- வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

19. 
- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்,
- சமையல் செய்யும் செயற்கை நுண்ணறிவு எந்திரம்,
- விண்மீன்களைக் கணக்கிடும் செயற்கை நுண்ணறிவுக் கருவி.

20. 
- வாகனம் ஓட்டுபவர்கள் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.
- மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப்பட்டை அணிய வேண்டும்.

21. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

22. அ) Artifacts - கலைப்படைப்புகள்; ஆ) Myth - தொன்மம்

23. மரங்களின் பெயர்கள் : ஆலமரம், வேப்பமரம்.
தமிழெண்கள்: நாலும் – நாலடியார் – ௪; இரண்டும் – திருக்குறள் – ௨

24. கொளல் வினா; இனமொழி விடை.

www.Padasalai.Net

**பொருள் :** சித்தாளின் இன்னல்களை உயிரற்ற செங்கற்கள் அறிவதில்லை.

**விளக்கம் :** அடுத்த வேளை உணவுக்காக அலுக்காமல் அனுதினமும் சித்தாளு கற்களைச் சுமக்கின்றாள். ஒருவேளை இவள் மரணம் அடைந்தால் கூட அது சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும்.

34. அ) புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. - பரஞ்சோதி முனிவர்

ஆ) நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. -வீரமாமுனிவர்

35. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:**
- ஓசை - அகவல் ஓசை.
- சீர் - ஈரசைச்சீர், காய்ச்சீர்.
- தளை - ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை.
- அடி - மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
- முடிப்பு - ஏகாரத்தில் முடியும்.

36. **அலகிடுதல்**

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| தொழு/தகை | நிரை நிரை | கருவிளம் |
| யுள்/ளும் | நேர் நேர் | தேமா |
| படை/யொடுங்/கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| ஒன்/னார் | நேர் நேர் | தேமா |
| அழு/தகண் | நிரை நிரை | கருவிளம் |
| ணீ/ரும் | நேர் நேர் | தேமா |
| அனைத்து | நிரைபு (நிரை நேர்) | பிறப்பு |

37. **நிரல்நிறை அணி - பார்க்க: PTA 4 - வினாத்தாள் 5 - வினா எண்: 36**

## பகுதி - IV

38. அ) **காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கமும் - நான் விருந்தளித்த நிகழ்வும்:**
- முகமலர்ச்சியுடன் வரவேற்று தின்பண்டங்களுடன் தேநீரும் தந்தனர்.
- வீட்டிலுள்ள அனைவரையும் பற்றி நன்கு விசாரித்தனர்.
- தலைவாழையில் நாட்டுக்கோழி குழம்பும், மீன்வறுவலுடன் ஊடிய உணவினை இட்டு, உணவருந்துமாறு கூறினர்.

www.Padasalai.Net

- வயிறும் மனமும் நிரம்பும் அளவில் அவர்களது உபசரிப்பு இருந்தது.
- அருகிலேயே உட்கார்ந்து கொண்டு உபசரித்தனர்.
- உணவருந்தியவுடன் கை கழுவ தண்ணீர் தந்ததுடன், துடைத்துக் கொள்ள கைக்குட்டையும் தந்தனர்.
- வீட்டு வாயில் வரை உறவினர்கள் வந்து வழியனுப்பியமை உள்ளத்தில் பெருமகிழ்வை உண்டாக்கியது.

ஆ) **'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்:**

**''தண்டலை மயில்களாட தாமரை விளக்கத் தாங்கக்,**
**கொண்டல்கண் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,**
**தெண்டிரை யெழினி காட்டத், தேம்பிழி மகரயாழின்**
**வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.''** – என்று மயில்களின் ஆட்டத்தையும் மலர்களின் தோற்றத்தையும், மேகங்களின் சத்தத்தையும் அலைகளின் அழகையும், வண்டுகளின் ரீங்காரத்தையும் அத்துணை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

**வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்**
**திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்...** – என்று கோசல நாட்டின் பெருமையைக் கம்பர் எடுத்துரைக்கிறார். கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை என்றும், நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை என்றும் குறிப்பிடும் கம்பரின் "ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது என்ற மெய்யியலைக் கொண்டு ஒரு நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் உத்தி'' போற்றத்தக்கது.

**''மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ**
**ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்''** – என்று பாடும் கம்பர் இராமனுடைய மாநிற மேனியை வருணிக்க மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச் சொல்ல இயலவில்லை என்பதை 'ஐயோ' என்ற சொல்லில் வைப்பதன் மூலமாக இயன்றதாக்குகின்றார்.

கவிதைகள் மூலம் பெறும் இன்பங்களில் ஒன்று சந்தம். கம்பரின் கவிதைகளில் சந்தம் சொந்தம் கொண்டாடுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்னும் பாரதியின் வரிகளுக்கேற்ப,

**''ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ**
**வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ''**... என்ற பாடலில் கம்பரின் ஓசையின்பம் மிளிர்கிறது.

**''உறங்குகின்ற கும்பகன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்**
**இறங்குகின்றது இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!''** – என்ற கம்பரின் பாடலில் உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், இடிக்கும் காட்சியைக் கண்முன் எழுப்புகிறது.

**''கம்பன் இசைத்த கவிதையெல்லாம் நான்''** – என்று பெருமைக்கொள்ளும் பாரதியின் கூற்றுக்குத் தகுந்த கவிப்புலமையும் சந்தநயமும் மிக்க மாபெரும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் என்றால் சாலப்பொருந்தும். கம்பரின் கவித்தேனைப் பருகி இன்புறுவோமாக.

நன்றி! வணக்கம்!

www.Padasalai.Net

வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் விவசாயம் செழித்தது. மருத நிலத்தின் இயற்கைக் கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருதநிலத்தில் உழவுத்தொழில் சிறந்திருந்தது.

43. அ) **விருந்தோம்பல்**

இல்வாழ்வின் மிகப்பெரிய பயன் விருந்தோம்பல் என்பர்.

**விருந்தினரை வரவேற்றல்:**

என்னுடைய இல்லத்திற்கு வருகை தந்த உறவினரை அகமும் முகமும் மலர்ந்து வரவேற்று நலம் விசாரித்து அவர் குடிப்பதற்குத் தண்ணீரைக் கொடுத்தேன்.

**உணவுண்ண அழைப்பு:**

உணவு உண்ண அழைத்து, கைகழுவ தண்ணீர் கொடுத்தும் அமர வைத்தேன்.

**வாழை இலையில் விருந்து:**

- தலைவாழை இலை விருந்து என்பது தமிழ் மரபு. அந்த வகையில் தலைவாழை இலையில் உறவினருக்கு உணவிட்டேன்.
- உணவை உண்ணும் உறவினரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வருமாறு வாழையிலையை விரித்திருந்தேன்.
- இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறினேன்.
- உறவினரின் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறினேன்.

**வெற்றிலை பாக்கு:**

உணவு உண்ட உறவினரை ஒரு பாத்திரத்தில் கைகளைக் கழுவுமாறு தண்ணீர் ஊற்றினேன். கைக்குட்டை போன்ற துணியைத் தந்து கைகளைத் துடைத்துக்கொள்ள வைத்தேன். பிறகு வெற்றிலை பாக்கு சுண்ணாம்பினை ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தேன். அவர் அதை மகிழ்வுடன் உண்டார்.

**வழியனுப்புதல்:**

உணவு உண்ட உறவினரிடம் திருப்தியாக உண்டீர்களா? என விசாரித்து வீட்டுத் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளுடன் வீட்டிலிருந்த இனிப்புகளையும் கொடுத்து அவரது வீட்டில் உள்ளவர்களிடம் கொடுக்கும்படி அன்புடன் கூறி, வாயில்வரை சென்று வழியனுப்பி வைத்தேன்.

**பசித்தவருக்கு உணவிடல்:**

நண்பகல் நேரத்தில், வயதான ஒருவர் பசியால் சாலை ஓரத்தில் தள்ளாடி வருவதைப் பார்த்தேன். எனது தந்தை என் செலவுக்காகக் கொடுத்திருந்த பணத்தில் அவருக்கு உணவினை வாங்கி வந்து தந்தேன். அவர் மிகுந்த பசியாக இருந்ததால் வேகம் வேகமாகச் சாப்பிட்டார். கண் கலங்கியவாறு நன்றியுடன் என்னை அம்முதியவர் வாழ்த்தினார். மிகுந்த மனநிறைவுடன் வீடு திரும்பினேன்.

ஆ) **மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்**

**பார்க்க: PTA 1 - மாதிரி வினாத்தாள் 2 - வினா எண் 43 (ஆ).**

www.Padasalai.Net

44. அ) **புயலிலே ஒரு தோணி - வருணனைகள், அடுக்குத் தொடர்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள் - பார்க்க: PTA 1 - மாதிரி வினாத்தாள் 2 - வினா எண் 44 (அ).**

ஆ) **பாய்ச்சல் - பார்க்க: PTA 1 - மாதிரி வினாத்தாள் 2 - வினா எண் 44 (ஆ).**

45. அ) **மனித நேயமிக்க ஆளுமை - நினைவிதழ்**

**முன்னுரை:**

'தேசப்பிதா' என்ற பெருமைக்குரியவர் காந்தியடிகள் ஆவார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகவே வாழ்ந்து உயிர்நீத்த மகான் ஒப்பற்ற ஆளுமை – காந்தியடிகள்.

**இளமைப்பருவம்:**

காந்தியடிகள் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் எனும் ஊரில், 1869 ஆம் ஆண்டு பிறந்தவர். இந்தியாவில் பள்ளிக்கல்வியை முடித்து இங்கிலாந்தில் 'பாரிஸ்டர் பட்டம்' பெற்று வழக்கறிஞர் ஆனார்.

**விடுதலைப் போராட்டம்:**

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி வெள்ளையர்களின் ஆதிக்க உணர்வைக் கண்டு மனம் நொந்தார். உப்புச் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்புப் போராட்டம், வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்களை முன்னின்று அறவழியில் போராடினார்.

**பொதுநலமே தன்னலம்:**

அறவழிப் போராட்டத்தைக் கையில் எடுத்தார். அமைதியான முறையில் அவர்களிடம் போராடி விடுதலைப் பெற முயன்றார். இப்போராட்டம் உலக நாடுகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது.

**எளிமையே அறம்:**

எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தாம் வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் தன் மனைவியையும் வாழ வைத்தவர். வாடும் விவசாயிகள் அரையாடை உடுத்துவதைக் கண்டு தாமும் மேலாடை அணிவதை நிறுத்தி எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

**நாட்டின் முன்னேற்றமே நோக்கம்:**

நாட்டில் வறுமை, பசி, பிணி போக்கப் பாடுபட்டவர். கைத்தொழில்களை வளர்த்தவர். சுதேசி இயக்கத்தை வளர்த்து சுதேசி பொருளை வாங்க வைத்தவர். இளைஞர்களை நாட்டின் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்தியவர்.

**எளியோரின் அன்பே சொத்து:**

மக்களோடு மக்களாக வாழ்ந்து மனித இனத்திற்கு பெருமை சேர்த்து உலகம் போற்றும் மகாத்மாவாக விளங்கினார். எளிமையான வாழ்வார் எல்லோர் உள்ளத்திலும் அன்பு கொண்டு வாழ்ந்தார்.

**முடிவுரை:**

தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதி எளிமையான வாழ்வால் அறவழியில் போராடி வெள்ளையனையும் அடிபணியச் செய்து சிறந்த ஆளுமையாக காந்தி விளங்கினார் என்பது பெருமைக்குரியதாகும்.

45. ஆ) **மக்கள் பணியே மகத்தான பணி**

**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 19-20 - வினா எண் 45 (ஆ).**

★★★

www.Padasalai.Net

வினாத்தாள் 9

# அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2021

வகுப்பு: X

## தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

2. **நீலச்சட்டை பேசினார் – இத்தொடரில் 'நீலச்சட்டை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகையைத் தேர்க.**
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

3. **தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது**
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

4. **மேன்மை தரும் அறம் என்பது**
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5. **திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி – இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க.**
அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகைஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை
இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

6. **கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் – இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்**
அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு

7. **சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம்**
அ) மதுரை ஆ) புகார் இ) வஞ்சி ஈ) முசிறி

8. **"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்ப்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு**
**கோல வெறிபடைத்தோம்;"** – பாரதியார்

www.Padasalai.Net

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.**

அ) வானத்து – வைத்தாங்கே ஆ) காற்றையும் – குடித்தொரு

இ) நிலாவையும் – குலாவும் ஈ) வைத்தாங்கே – வெறிபடைத்தோம்

9. **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிகோடிட்டப் பகுதி குறிப்பிடுவது**

அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும்

இ) தாளும், ஓலையும் ஈ) சருகும், சண்டும்

10. **கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும்.**

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்

11. **ஆண் குழந்தையை 'வாடிச்செல்லம்' என்று கொஞ்சுவது**

அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி

இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?*
*முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"*

12. **எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. **செந்தமிழ் என்பது**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. **உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை

இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. **வேறார் புகழுரையும் – இத்தொடரில் 'வேறார்' என்பது**

அ) தமிழர் ஆ) சான்றோர்

இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.

www.Padasalai.Net

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6**

32. "மகரந்தத் தூளைச் சுமந்த கொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா;" – என்ற பாடல் அடிகளில்

அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

ஆ) பாரதியார் எதனை வாசனையுடன் வரச் சொல்லுகிறார்?

இ) சுமந்துகொண்டு – என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.

33. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள கடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.

34. **அடி பிறழாமல் எழுதுக.**

அ) "தண்டலை மயில்க ளாடத்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். **(அல்லது)**

ஆ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

35. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடிஆடி ஓய்ந்துறங்கு!
– இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர், தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.

37. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25**

38. அ) 'காலக் கணிதம்' கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

"கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!

www.Padasalai.Net

ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!'' – கண்ணதாசன்

**(அல்லது)**


ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.

39. அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தைக் கவினுற எழுதுக.



41. கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. அ) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்த சமயத்தில் சினம் கொள்ளத்தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நீவீர் பின்பற்ற வேண்டிய அறங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

ஆ) **மொழிபெயர்க்க:**

If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

Language is the road map of a Culture. It tells you where its people come from and where they are going. – Rita Mae Brown

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43. அ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சான்று தந்து விளக்குக.

www.Padasalai.Net

**(அல்லது)**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) அன்னமய்யா என்னும், பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

முன்னுரை – உழவுத்தொழில் – உழவர் – உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் – உணவினை வீணாக்காமல் உண்ணுதல் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை – 'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு' – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – 'விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்' – முடிவுரை.

★★★

**விடைகள்** **வினாத்தாள் - 9**

## அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2021

### பகுதி - I

1. ஈ) அங்கு வறுமை இல்லாததால்
2. இ) அன்மொழித்தொகை
3. ஈ) சிலப்பதிகாரம்
4. அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
5. ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை
6. இ) ஐ, கு
7. ஆ) புகார்
8. இ) நிலாவையும் – குலாவும்
9. ஈ) சருகும், சண்டும்
10. ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
11. அ) பால் வழுவமைதி
12. இ) எம் + தமிழ் + நா
13. அ) பண்புத்தொகை
14. ஆ) தமிழ் மொழியை
15. இ) வேற்றுமொழியினர்

### பகுதி - II

16. அ) மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர் யார்?

17. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப் படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.

18. நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று மிகக்குறைந்த விலைக்குப் புத்தகங்கள் வாங்குவார். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.

www.Padasalai.Net

19. யாருக்காக அழுதான், உன்னைப்போல் ஒருவன், ஊருக்கு நூறு பேர்.

20. உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணரும். நோயாளி, மருத்துவரின் அன்பும் நம்பிக்கையும் உடைய சொற்களால் உடல் அளவிலும், மனதளவிலும் நலம் பெறுவார்.

21. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

22. அ) Consulate - துணைத்தூதரகம் ஆ) Folk Literature - நாட்டுப்புற இலக்கியம்

23. வெட்சித் திணை × கரந்தைத் திணை
வஞ்சித் திணை × காஞ்சித் திணை
நொச்சித் திணை × உழிஞைத் திணை

24. "இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான்! உனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு என்னுடன் வருவான் பார்த்துக்கொள்! சரி, தொலைப்பேசியை வைத்துவிடு. நான் புறப்படுகிறேன்."

25. மயங்கிய = மயங்கு + இன் + ய் + அ
மயங்கு பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ய் – உடம்படுமெய், அ – பெயரெச்ச விகுதி.

26. வெண்பா – செப்பலோசை; ஆசிரியப்பா – அகவலோசை

27. பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். ம.பொ.சி.

28. மணிமேகலை, வான்மழை, பூமழை, விண்மணி, தேன்மழை, பூவிலங்கு.

## பகுதி - III

29. அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது விளைபொருள் வகைகளால் விளங்கும்.
ஆ) சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலியன.
இ) செந்நெல், வெண்ணெல், கார்நொல் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

30. **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே:**

- அறம் செய்வதில் வணிக நோக்கம் இல்லாதவன் வள்ளல் ஆய் என்று முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.
- தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் கூறியுள்ளார்.
- "செல்வத்தின் பயனே ஈதல்" என்கிறது புறநானூறு.
- உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

இத்தகைய அறங்கள் அனைத்தும் இன்றைக்கும் தேவையானவையே ஆகும்.

www.Padasalai.Net

37. **அலகிடுதல்**

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| செயற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/தக் | நிரை நேர் | புளிமா |
| கடைத்/தும் | நிரை நேர் | புளிமா |
| உல/கத் | நிரை நேர் | புளிமா |
| தியற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/து | நிரை நேர் | புளிமா |
| செயல் | நிரை | மலர் |

38. அ) **காலக்கணிதம்**

**திரண்ட கருத்து:**

கவிஞன் நானே காலத்தைக் கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னைவிட விலை உயர்ந்த செல்வம் என்னுடைய கருத்துகள். சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும் கடவுளும் அறிந்தவை.

**மோனை நயம்:**

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

**எ.கா: க**விஞன் – **க**ருப்படு ; **இ**வை சரி – **இ**வை தவறாயின் ...

**எதுகை நயம்:**

செய்யுளில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும். **எ.கா:** க**ரு**ப்படு – பொ**ரு**ளை – உ**ரு**ப்பட

**முரண்:**

செய்யுளில் அடியிலோ சீரிலோ எதிரெதிர் பொருள் தரும் வகையில் தொடுக்கப்படுவது முரண் ஆகும். **எ.கா:** ஆக்கல் × அழித்தல்

**இயைபு நயம்:**

அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபு ஆகும்.

**எ.கா:** ... புகழுடைத் தெய்**வம்** – ...பொருளென் செல்**வம்**

**அணி நயம்:**

கண்ணதாசன் இப்பாடலில், கடவுளுக்கு இணையாக

‘யானோர் காலக்கணிதம்

நானோர் புகழுடையத் தெய்வம்’ என உருவகப்படுத்தி உள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

சந்தம் தமிழுக்குச் சொந்தம் என்பதற்கு ஏற்ப, இப்பாடலில் ‘எண்சீர் கழிநெடிலடி’ ஆசிரிய விருத்தம் இடம் பெற்றுள்ளது. அகவலோசையுடன் இனிய சந்த நயமும் பெற்றுள்ளது.

www.Padasalai.Net

ஆ) **கருணையனின் தாய் மறைவு - கவிதாஞ்சலி**

**முன்னுரை:**

தாயின் அன்பை எழுத உலக மொழிகள் போதாது. தாயை இழந்த துயரம் சொல்லில் சொல்ல இயலாது. தாயை இழந்த கருணையனின் கண்ணீர் சொற்களை அறிவோம்.

**வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி:**

**மலர்ப்படுக்கை:**

கருணையனின் தாய் மறைந்துவிட்டாள். கருணையன் தன் கையைக் குவித்துப் பூமித்தாயே! என் அன்னையின் உடலைக் காப்பாயாக என்று கூறி, குழியிலே மலர்ப்படுக்கையைப் பரப்பினான். அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும் தன் கண்ணீரையும் பொழிந்தான்.

**இளம்பயிர் வாட்டம்:**

என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூய மணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன். என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

**அம்பு துளைத்த வேதனை:**

தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வலியைப் போல என் துயரம் வேதனை தருகிறது. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்.

**தவிப்பு:**

சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன். நவமணிகள் பதித்த மணிமாலைகளை இணைத்தது போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.

**உயிர்கள் அழுதல்:**

புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன் மலர்கள்தோறும் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போலக் கூச்சலிட்டன.

**முடிவுரை:**

வீரமாமுனிவர் உவமை, உருவக மலர்களால் தன் கவிதை மூலம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

39. அ) **கொரோனா - ஊரடங்கு - பயனுள்ள நேரம் - நண்பனுக்குக் கடிதம்**

15.09.22
தஞ்சாவூர்.

அன்புள்ள நண்பன் கபிலனுக்கு,

முகிலன் எழுதுவது. நலம். நலமறிய ஆவல். கடந்த இரண்டரை ஆண்டு காலமாக நம்மை வாட்டி வதைத்த பெருந்தொற்று நம்மையெல்லாம் வீட்டிலேயே முடக்கி வைத்தது. அவ்வாறு முடக்கி வைத்தாலும் அந்த நேரத்தை நான் பயனுற கழித்தேன்.

www.Padasalai.Net

வழக்கம்போல் காலையில் எழுந்து என் தந்தையுடன் வயலுக்குச் செல்வேன். வயல்வெளியில் எனக்குத் தெரிந்த உதவிகளை செய்வேன். என் அண்ணன் கணினித் தொழில்நுட்பம் படித்து வீட்டிலேயே பணி செய்துவந்ததால், அவனிடம் கணினி தொடர்பான அனைத்தும் கேட்டு தெரிந்து கொண்டேன். இப்போது கணினி தமிழில் தட்டச்சும் செய்வேன். அதனால் கொரோனா ஊரடங்கு காலம் எனக்கு பயனுள்ளதாக இருந்தது. நீ எவ்வாறு கழித்தாய் என்பதை என் கடிதம் கண்டவுடன் தெரியப்படுத்து.

அன்புடன்,
க. முகிலன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
கி. கபிலன்,
23, காந்திநகர்,
மதுரை - 1.

ஆ) **உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்**
**பார்க்க: PTA 1 - வினாத்தாள் 2 - வினா எண் 39 (அ).**

40. **படம் உணர்த்தும் கருத்துகள்:**

பெயரோ அன்னமய்யா
இட்டதோ அன்னம்
தொட்டதோ மனசு
பசி என்ற தீயில்
வெந்து வந்த வழிபோக்கனுக்கு
கஞ்சிக் களையம் கொடுத்து
நெஞ்சம் குளிர வைத்தார்

41. **உறுப்பினர் சேர்க்கை படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : | **பூங்குழலி** |
| 2. | பாலினம் | : | **பெண்** |
| 3. | பிறந்த தேதி | : | **17.01.2005** |
| 4. | தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. | பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **நிலவன்** |
| 6. | இரத்த வகை | : | **$O^+$** |
| 7. | உயரம் மற்றும் எடை | : | **157.5 செ.மீ (5.17 அடி), 55 கி.** |
| 8. | வீட்டு முகவரி | : | **112, கம்பர் தெரு, பாரதிநகர், கடலூர் மாவட்டம்.** |
| 9. | தொலைபேசி/அலைபேசி எண் | : | **8883681115** |
| 10. | இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | **பத்தாம் வகுப்பு** |
| 11. | பள்ளியின் முகவரி | : | **நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கடலூர்.** |
| 12. | சேர விரும்பும் விளையாட்டு | : | **கால்பந்து** |

சேர்க்கை எண்: **216**

www.Padasalai.Net

இல்லாமல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து உழைக்கின்ற பெருமக்கள் உழவர் பெருமக்களே ஆவர்.

**உழவுத் தொழிலின் இன்றியமையாமை:**

உலகில் நடைபெறும் தொழில்களில் முதன்மைத் தொழிலான உழவுத் தொழிலை உழவு என்பது தொழிலல்ல. உலகில் வாழ்கின்ற மக்களின் உயிர் ஆதாரமாகும். உலக மக்களின் பசி, பட்டினி இல்லாமல் மகிழ்வாக வாழ உழவு இன்றியமையாததாக உள்ளது. உழவுத்தொழில் மேன்மை அடைய வேண்டும் என்று சங்ககாலம் தொட்டு போற்றி வந்தனர். 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்று வள்ளுவர் போற்றுகிறார். இந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில்,

**'எங்க ஏரோட்டம் நின்னு போனா**
**உங்கக் காரோட்டம் என்னவாகும்'** என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

உழவுத் தொழிலின் மேன்மையை உணர்ந்தே அரசாங்கமும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நல்ல பல திட்டங்களின் வழியாகவும், தற்காலத்தில் அதற்கு மாற்றாக நிதி ஆயோக்கின் வாயிலாகவும் வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**உழவர்களை மதித்தல்:**

விவசாயம் செய்யும் விவசாயி இந்தியாவின் முதுகெலும்பு என்கிறார் காந்தி. உழவர்கள் சேற்றில் காலை வைக்காவிட்டால் நாம் வாயில் சோற்றை வைக்க முடியாது என்பதை உணர்ந்து உழவர்களை மதித்து வாழ்வோம்!

**உணவை வீணாக்காமல் உண்ணுதல்:**

'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்' என்ற வாக்கிற்கிணங்க, உணவை வீணாக்காமல் பசியோடு வாடுபவர்களுக்கு உணவளிப்போம். உணவு உயிர் வாழ்க்கைக்கு ஆதாரம். உலகில் எத்தனையோ பேர் உணவின்றி இறக்கிறார்கள். ஆதலால் உணவை வீணாக்காமல் உண்போம்!

**முடிவுரை:**

எந்தத் தொழில்கள் செய்தாலும் விவசாயம் என்ற தொழில் இல்லையென்றால் உலகம் இல்லை. உணவின்றி ஒருநாளும் வாழ இயலாது. அதனால் உழவரைப் போற்றுவோம்! உழவுத்தொழில் செய்வோம்!!

ஆ) **'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு' – குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுதல்.**

**முன்னுரை:**

வாகனங்கள் ஓட்டி செல்லும் சாலையில் நடந்து செல்பவர்களும் சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். சாலை விதிகளைப் பின்பற்றாமல் நடப்பதனால் சாலை விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. சாலை விதிகளை எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

**உயிர்ப் பாதுகாப்பு:**

'அரசுக்கும் தனியாருக்கும்
விபத்தில் கூடவா போட்டி..?
போட்டி போட்டு
இடித்து அழிக்கிறார்கள்
மக்கள் கனவுகளை....
நீதி மன்றங்களில் இன்னமும்
தேங்கி இருப்பதெல்லாம்...
விபத்து வழக்குகள் தான்....'

www.Padasalai.Net

– என்கிறார் கவிஞர் தமிழ் நிலா. சாலை என்பது விளையாட்டு மைதானம் அல்ல. கவனமில்லாமல் வாகனங்களை ஓட்டுவது, வேகமாக வாகனங்களை ஓட்டுவது, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனங்களை இயக்குவது ஆகியவை விபத்தினை ஏற்படுத்தி மரணத்திற்கு வழிவகுக்கின்றன. சாலையைப் பாதுகாப்பாக பயன்படுத்தினால் விபத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**சாலை விதிகள்:**

அனுமதிக்கப்பட்ட திசையில் இல்லாமல் எதிர்திசையில் வாகனத்தைப் பின்னால் செலுத்தக் கூடாது. தடக் கோடுகள் இடப்பட்ட சாலைகளில், தடத்தின் உள்ளேயே வாகனத்தைச் செலுத்த வேண்டும். தடம் மாற நேர்ந்தால், மாறுவதற்கு முன்பு உரிய கை சைகைகள் (இண்டிகேட்டர்) காட்ட வேண்டும். சாலைச் சந்திப்பு, பாதசாரிகள் கடக்கும் இடம் போன்ற இடங்களை அணுகும்போது, சாலை மீது, 'நிறுத்தம்' என்ற அடையாளத்தைக் கண்டால், வாகனத்தை நிறுத்தக் கோட்டுக்கு முன்னால் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்:**

**'தலைக்கவசம் உயிர்க் கவசம்'**

**'100 இல் போனால் 108 வரும்'**

சாலையில் இடப்பக்கம் வண்டியை ஓட்ட வேண்டும். அடையாளப் பலகைகளை அறிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும். மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கை பட்டை அணியவேண்டும். தீயணைப்பு ஊர்திக்கும், பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிட வேண்டும்

**விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்:**

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் சமீபத்திய அறிக்கை ஒன்று திடுக்கிடும் புள்ளிவிவரத்தைத் தருகிறது. 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் 178 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான அறிக்கையின்படி, சுமார் 12 இலட்சத்துக்கும் அதிகமானோர் சாலை விபத்துகளில் ஆண்டுதோறும் மரணமடைவதாகத் தெரிகிறது. படுகாயமடைவோரின் எண்ணிக்கை இரண்டரை கோடிக்கும் அதிகம்.

**முடிவுரை:**

வளர்ந்த நாடுகளில் வாகனங்கள் அதிகமாக இருந்தாலும் இந்தியாவில் மட்டும் விபத்து அதிகமாக உள்ளது. விபத்துக் குறைவான ஜப்பான், சுவீடன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகக் குறைவாகவே சாலை விபத்துகள் நடைபெறுகிறது. ஆகவே நாமும் சாலை விதிகளை பின்பற்றி விபத்து இல்லா இந்தியாவை உருவாக்குவோம்.

★★★

வினாத்தாள் 10

# அரசு வினாத்தாள் - மே 2022

வகுப்பு: X

## தமிழ்

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்**

1. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -------.**
அ) குலைவகை ஆ) மணிவகை
இ) கொழுந்துவகை ஈ) இலைவகை

2. **'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல் -------.**
அ) அறிவினா ஆ) கொளல் வினா இ) அறியா வினா ஈ) ஏவல் வினா

3. **'ஓரெழுத்தல் சோலை – இரண்டெழுத்தில் வனம்' – என்ற புதிருக்கான விடையைத் தேர்க.**
அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு

4. **'தூசும் துகிரும் ஆரமும் அகிலும்' – இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் -------.**
அ) மணிமேகலை ஆ) தேம்பாவணி இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

5. **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது -------.**
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

6. **மலர்விழி பாடினாள் – இத்தொடர் -------.**
அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

7. **கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது – என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு -------.**
அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம்
இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்

8. **மெய்கீர்த்தி என்பது -------.**
அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
ஆ) மன்னர்களின் புகழை ஓலைச்சுவடிகளில் எழுதிவைப்பது
இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை
ஈ) அறக்கருத்துகள் அடங்கிய நூல்

9. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -------.**
அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

www.Padasalai.Net

**10. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது -------.**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**11. 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.**

அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை - காலால் நடத்தல் ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?*
*முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"*

**12. 'எந்தமிழ்நா' என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**13. செந்தமிழ் என்பது -------.**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை
இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

**15. 'வேறார் புகழுரையும்' - இத்தொடரில் 'வேறார்' என்பது -------.**

அ) தமிழர் ஆ) சான்றோர்
இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8**

16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
 அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.
 ஆ) 1906 - ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
18. குறிப்பு வரைக - அவையம்.
19. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
 முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
20. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.
21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

www.Padasalai.Net

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10**

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
    அ) இன்சொல் ஆ) எழுகதிர்
23. 'வாழ்க' பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) விடு - வீடு ஆ) கொடு - கோடு
25. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.
26. கலைச்சொற்கள் தருக. அ) Belief அ) Philosopher
27. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன். - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
28. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**
    "தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
    தேரும் சிலப்பதி காரமதை
    ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
    ஓதி யுனர்ந்தின் புருவோமே."

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" - இதுபோல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

    அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு, உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

    அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?
    ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?
    இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?
31. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக் வேண்டும். 2×3=6**

32. கம்பராமாயணம் - நூற்குறிப்பு வரைக.
33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு கட்டுவன யாவை?

www.Padasalai.Net

34. **அடி பிறழாமல் எழுதுக.**

அ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

**(அல்லது)**

ஆ) "நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள், வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36. தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.

37. 'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு' - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**பிரிவு - 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38. அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.

39. அ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுறு ஐந்து தொடர்களில் எழுதுக.



41. வீட்டு எண்: 21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப்படிவத்தினை நிரப்புக.

www.Padasalai.Net

**விடைகள்** **வினாத்தாள் - 10**

## அரசு வினாத்தாள் - மே 2022

### பகுதி - I

1. ஆ) மணிவகை
2. ஆ) கொளல் வினா
3. அ) காடு
4. ஈ) சிலப்பதிகாரம்
5. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
6. இ) தொடர்மொழி
7. ஈ) காற்றின் பாடல்
8. அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
9. ஆ) வேற்றுமை உருபு
10. ஈ) சிலப்பதிகாரம்
11. ஈ) கால் உடை – காலால் உடைத்தல்
12. இ) எம் + தமிழ் + நா
13. அ) பண்புத்தொகை
14. ஆ) தமிழ் மொழியை
15. இ) வேற்றுமொழியினர்

### பகுதி - II

16. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.

17. அ) ம.பொ.சி எவ்வாறு இலக்கிய அறிவு பெற்றவர்?
    ஆ) எந்த ஆண்டு வ.உ.சி ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?

18. 
    - அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரியும் அறம்கூறும் மன்றங்கள் அவையம் எனப்பட்டன.
    - "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" என்கிறது புறநானூறு.
    - மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்கிறது மதுரைக்காஞ்சி.

19. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

20. நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி.

21. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
    இன்மை புகுத்தி விடும்

22. அ) இன்சொல் – பண்புத்தொகை – இனிமையான சொல் கூறுதல் சான்றோருக்கு அழகு
    ஆ) எழுகதிர் – வினைத்தொகை – மனித வாழ்க்கை எழுகதிர் போன்றது.

23. வாழ்க – வாழ் + க;
    வாழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

24. அ) விடு – வீடு : அகந்தையை விடு, வீடு பேறு (சொர்க்கம்) கிடைக்கும்.
    ஆ) கொடு – கோடு : இராகவன் தன் நண்பன் கொடுத்த அளவுகோலைக் கொண்டு கோடு வரைந்தான்.

25. வெண்பா – செப்பலோசை; ஆசிரியப்பா – அகவலோசை.

www.Padasalai.Net

26. அ) Belief - நம்பிக்கை
ஆ) Philosopher - மெய்யியலார்.

27. வரும் கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்வேன்.

28. "தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே"

29. **இளம் பயிர் வகைகளின் தொடர்கள்:**
பிள்ளை - தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன்.
கன்று - மாங்கன்று செழித்து வளர்ந்துள்ளது.
நாற்று - தோட்டத்தில் கத்தரிநாற்று நட்டார்.
வடலி - தோப்பில் பனைவடலியைக் கண்டேன்.
குருத்து - வாழையின் குருத்து நீண்டுள்ளது.

30. அ) அறம் கூறும் மன்றங்கள்.
ஆ) அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்.
இ) துலாக்கோல் போல நடுநிலை மிக்கது.

31. **வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி:**
நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று மிகக்குறைந்த விலைக்குப் புத்தகங்கள் வாங்குவார். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.

32. **கம்பராமாயணம் – நூற்குறிப்பு:**
- வடமொழியில் வால்மீகி என்பவரால் எழுதப்பட்ட இராமாயணம் வால்மீகி இராமாயணம். கம்பர் இயற்றிய இராமாயணம் என்பதால் கம்பராமாயணம்.
- ஆறு காண்டங்கள் கொண்டது. பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்.
- 113 படலங்கள் உடையது.
- 10569 பாடல்கள் கொண்டது.

33. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள்:**
- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமேஅழகான மணிமேகலையே!
- கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

- செல்வர் வாளில் சிறைப்பட மாட்டேன். பதவி வாளுக்குப் பயப்பட மாட்டேன். அன்பும், விருப்பமும் மிகுந்து ஆசை தருவதை விரும்புவேன். என்னிடம் உண்டு என்றால், பிறர் உண்ணத் தருவேன். இல்லை என்றால் பிறர் இல்லம் தட்டுவேன்.
- வண்டு போல மாறி மலரில் அமர்ந்து, குடித்த தேனை ஊர்ப்புறம் தருவேன். கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் சொல்லாத கருத்துகளைச் சொல்லிட முயற்சிப்பேன்.
- என்னுடல் புகழ்ந்தால் புல்லரிக்காது. இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது. என் கவிதை வாக்குமூலம் அதை வைத்து இறந்த பிறகு தீர்ப்பை எழுதுங்கள். கல், மரம், விலங்காக மாற நான் காட்டு விலங்கு கிடையாது.
- மாற்றம் எனது மானிடத் தத்துவம். மாறும் உலகின் மகத்துவம் அறிவேன். நன்மை, தீமை அறிந்து ஏற்கும் என் சாலை. தலைவர் மாறுவார்கள், தர்பார் மாறும், தத்துவம் மட்டும் குறையாத அட்சயப் பாத்திரம். ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக்கொள்ளட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும். வாய்ச்சொற்கள் உடம்பினைத் தொடாது. நானே தொடக்கம்; நானே முடிவு. நான் சொல்வதுதான் நாட்டின் சட்டம்.

39. அ) **தாத்தா பாட்டிக்குக் கடிதம் எழுததல்.**

ஆடுதுறை,
26.08.2022.

அன்புள்ள தாத்தா பாட்டிக்கு,

நலம். நலமறிய ஆவல். கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருந்தொற்று (கொரோனா) பரவி மக்களை ஆட்டிவிக்கிறது. பொதுவாக வயதில் முதியவர்களைத் தான் அதிகம் பாதிக்கிறது. அதனால் நீங்கள் இருவரும் மிகப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கிருமி நாசினி, சோப்பு போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். கட்டாயம் முகக்கவசம் அணியுங்கள். சூடான நீர், சூடான உணவுப் பொருளைப் பயன்படுத்துங்கள். தொற்று குறைந்த பிறகு நான் நேரில் வருகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு பேரன்,
க. மிளிரன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
வீ. ஆனந்தன்,
72, நேரு நகர்,
சேலம் - 2.

ஆ) **மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுதல்.**
**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 - வினாத்தாள் 1 - வி.எண்: 39 (அ).**

40. **படம் உணர்த்தும் கருத்துகள்:**

அன்னையின் கைகள் அன்னமிடுகின்றன.
அன்பைப் பொழிந்து பாசத்தை ஊட்டுகின்றன.
சிறுகுழந்தைகளோடு பெரும் மூதாட்டியும் இருக்கிறாள்.
பெரியோருக்கும் சிறியோருக்கும் நற்சுவையாற்றுகிறாள்.
இல்லறம் போற்றும் இல்லத்தரசியின் நற்குணம் வாழிய.

www.Padasalai.Net

41. **மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிரப்புதல்.**
**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 - வினாத்தாள் 1 - வினா எண்: 39 (அ).**

42. அ) **இன்சொல் பேசுவதனால் விளையும் நன்மைகள்**
- பிறர் மனம் மகிழும்.
- அறம் வளரும்.
- புகழ் பெருகும்.
- நல்ல நண்பர்கள் சேருவர்.
- அன்பு நிறையும்.

ஆ) **மொழிபெயர்த்தல் - இயற்கை:**

பொன்னான சூரியன் தினமும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி இருளை மறையச் செய்யும். பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையை தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு ரம்மியமான சூழ்நிலையை உருவாக்கும்.

43. அ) **சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே:**
**பார்க்க: அரசு வினாத்தாள் செப்டம்பர் 21 - வினா எண்: 43 (அ).**

ஆ) **தமிழின் சொல்வளம் - புதிய சொல்லாக்கத்திற்கான தேவை:**
**பார்க்க: அரசு வினாத்தாள் செப்டம்பர் 21 - வினா எண்: 43 (ஆ).**

44. அ) **மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் - வீரப்பன்**
**பார்க்க: அரசு மாதிரி வினாத்தாள் 2019-20 - வினாத்தாள் 1 - வி.எண்: 44 (ஆ).**

ஆ) **கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி.**
**பார்க்க: அரசு வினாத்தாள் செப்டம்பர் 21 - வினா எண்: 44 (ஆ).**

45. அ) **சாலைப் பாதுகாப்பு - உயிர்ப் பாதுகாப்பு**
**பார்க்க: அரசு வினாத்தாள் செப்டம்பர் 21 - வினா எண்: 45 (ஆ).**

ஆ) **மக்கள் பணியே மகத்தான பணி.**

**முன்னுரை:**

தமிழகத்தின் தலைசிறந்த முதல்வர், கர்மவீரர் படிக்காத மேதை, கல்விக்கண் திறந்தவர். நாட்டில் பல தலைவர்களை உருவாக்கிய காமராசரைப் பற்றிக் இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர்:**

1903 ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் குமாரசாமி - சிகாமிக்கு மகனாக விருதுநகரில் பிறந்த கர்மவீரர். படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலே வேலைக்குச் சென்றவர். அப்போது பல தலைவர்களின் பேச்சுகளாலும், அரசியல் நிகழ்வுகளாலும் ஈர்க்கப்பட்டு தம்மையும் அதில் இணைத்துக் கொண்டார்.

www.Padasalai.Net

**நாட்டுப்பற்று:**

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, உப்புச்சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டு சிறைச் சென்றார். ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் எண்ணி கடைசி வரை திருமணம் செய்யாமல் வாழ்ந்த தன்னிகரற்ற தலைவர் ஆவார்.

**மொழிப்பற்று:**

1957 - 58 இல் சென்னை மாகாணத்தின் நிதிநிலையை தமிழில் வழங்கினார். 1956 ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழியாகவும், 1960 ஆம் ஆண்டு கலைச்சொல் அகராதியும் இவரால் கொண்டு வரப்பட்டது.

**பொதுவாழ்வில் தூய்மை:**

பொதுவாழ்வில் தூய்மை கொண்ட இவர் முதல்வராக இருந்த காலத்தில் தன் தாயை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் சென்னையில் உள்ள தனது வீட்டில் தங்க வைத்தது இல்லை. வாடகை வீட்டில் தங்க வைத்தார்.

**எளிமை:**

ஏழையாகப் பிறந்து எளிமையாக வாழ்ந்து எல்லோர் மனத்திலும் நிறைந்து, தன்னிடம் பணமோ, வங்கிக் கணக்கோ இல்லாமல் வாழ்ந்து சிறந்த பெருமை காமராசருக்கே உண்டு.

**மக்கள் பணியே மகத்தான பணி:**

காமராசர் காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் இன்றும் நிலைத்து நிற்கிறது. பல நீர்த்தேக்கங்கள், வேளாண் திட்டங்கள், வீதிதோறும் பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார்.

**முடிவுரை:**

வாழ்ந்தாலும் பேசும், மறைந்தாலும் பேசும் என்பதற்கேற்ப ஊர் போற்றும் உத்தமராக, கருப்புக் காந்தியாக, பெருந்தலைவராக வாழ்ந்தவர் காமராசர் என்றால் சாலப்பொருந்தும்.

★★★